1791

ஜகத்குரு

# ஸ்ரீ ஆதி சங்கராசாரியர் பாம்பரை

OFFICE OF ... BOOKS * MADRAS *
23 DEC 1924

...ள] [விலை அணா 2

R66x
N28
176948

ஓம்

ஜகத் குரு

# ஸ்ரீ ஆதி சங்கராசாரியர் பரம்பரை

இத்திரபீடம் கரபாத்திர யோகீச்வரர்

இயற்றியது

OFFICE OF THE ... OF BOOKS
23 DEC 1924

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை,

87, தம்புசெட்டி வீதி, சென்னை.

1923

விலை அணா 2

[All Rights Reserved]

921.914
3801

176948

ஓம்

தத் ஸத்

பரப்ரஹ்மணே நம:

# ஸ்ரீ ஜகத்குரு பாரம்பரை

அஃதாவது, அநாதி முக்த சித்துருவாயும், அநாதி காரணராயும், காரண காரிய மில்லாதவராயும், ஸ்ருஷ்டி முதலிய கற்பனை கடந்தவராயும், சஜாதியாதிபேத ரகிதராயும், நித்திய சுத்த புத்த முக்த சத்யபரமானந்த ஸ்வரூபராயும் விளங்காநின்ற ஸ்ரீ சிவபெருமான்: மந்தம், மந்ததரம், தீவரம், தீவரதரம், அதிதீவர மென்னும் பக்குவமமைந்த அன்பர்கள் நிமித்தம், நீர் மழைக் கட்டியாய்த் தடித்ததுபோல, மானிட தேக மெடுத்துத் தேகேந்திரிய முதலானவைகளை யான் எனதெனக்கொண்ட பேதபாவனையைத் தடுத்து, தொன்றுதொட்டு மயக்கஞ் செய்யு மூல அஞ்ஞானத்தைக் கெடுத்து, அபேதமாயும் மனோ வாசா மகோசரமாயும் சர்வாதீதமாயுமுள்ள தனது ப்ரஹ்மானந்தத்திற் சுகித்திருக்குந் தன்மையைச் சொல்லுதலாம்.

ஸ்லோகம்

𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑍋 𑌮𑌹𑌾𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌤𑍃𑌤𑍀𑌯𑌸𑍍𑌤𑍁 𑌚𑌤𑍁𑌰𑌾𑌨𑌨𑌃 ।
𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌶𑍍𑌶𑌕𑍍𑌤𑌿𑌯𑍋𑌗𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 𑌪𑌰𑌾𑌶𑌰 𑌮𑌹𑌾𑌮𑍁𑌨𑌿𑌃 ।
𑌵𑍍𑌯𑌾𑌸𑌶𑍍𑌶𑍁𑌕𑍋 𑌗𑍌𑌡𑌪𑌾𑌦𑍋 𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍𑌮𑍁𑌨𑌿𑌃
𑌤𑌤𑌃 𑌶𑍍𑌰𑍀𑌶𑌙𑍍𑌕𑌰𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌃 𑌷𑌣𑍍𑌮𑌤𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 ॥

மஹாதேவோ மஹாவிஷ்ணு த்ருதீயஸ் சதுராநந:
வஸிஷ்டச் சக்தியோகீந்த்ர: பராசர மஹாமுனி:
வ்யாஸஸ்சுகோ கௌடபாதோ கோவிந்த பகவாந்முனி:
குரு ஸ்ரீ சங்கராசார்ய: ஷண்மத ஸ்தாபகப்ரபு:

## இதன் பொருள்

"ஸ்ரீ கயிலாயத்தி லெழுந்தருளிய ஸ்ரீ மகாதேவர் முதலாவது ஆசார்யர், அவரது மாணாக்கர் மகாவிஷ்ணு, அவருடைய சிஷ்யர் சதுர்முக ப்ரஹ்மா, அவர் மாணாக்கர் வசிஷ்டர், அவரது சிஷ்யர் சக்தி யோகீந்திரர், அவர் மாணாக்கர் பராசர மகாமுனி, அவர் மாணாக்கர் வியாச முனிவர், அவரது மாணாக்கர் சுகர், அவருடைய மாணாக்கர் கௌடபாதர், அவர் மாணாக்கர் கோவிந்த பகவத்பாதர், அவருடைய சிஷ்யர் சைவ முதலிய ஆறு மதங்களை ஸ்தாபனஞ் செய்தமையால் ஷண்மத ஸ்தாபனாசாரியர் எனவும், ஜகத்குரு எனவும் பிரசித்தி நாம மமைந்த ஸ்ரீ சங்காரசாரிய ஸ்வாமிகள்.''

இதுவுமன்றி, இன்னும் ஒருவிதம்:

### ஶ்லோகம்

𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌂 𑌪𑌦𑍍𑌮𑌭𑌵𑌂 𑌵𑌸𑌿𑌷𑍍𑌟𑌂
𑌶𑌕𑍍𑌤𑌿𑌂𑌚 𑌤𑌤𑍍𑌪𑍁𑌤𑍍𑌰 𑌪𑌰𑌾𑌶𑌰𑌞𑍍𑌚 ।
𑌵𑍍𑌯𑌾𑌸𑌂 𑌶𑍁𑌕𑌂 𑌗𑍌𑌡𑌪𑌾𑌦𑌂 𑌮𑌹𑌾𑌨𑍍𑌤𑌂
𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦 𑌯𑍋𑌗𑍀𑌨𑍍𑌦𑍍𑌰 𑌮𑌥𑌾𑌸𑍍𑌯𑌶𑌿𑌷𑍍𑌯𑌂 ।
𑌶𑍍𑌰𑍀 𑌶𑌂𑌕𑌰𑌾𑌚𑌾𑌰𑍍𑌯 𑌮𑌥𑌾𑌸𑍍𑌯 𑌪𑌦𑍍𑌮𑌪𑌾𑌦𑌂𑌚
𑌹𑌸𑍍𑌤𑌾𑌮𑌲𑌕𑌂𑌚 𑌶𑌿𑌷𑍍𑌯𑌂 ।
𑌤𑌂 𑌤𑍋𑌟𑌕𑌂 𑌵𑌾𑌰𑍍𑌤𑌿𑌕𑌕𑌾𑌰 𑌮𑌨𑍍𑌯𑌾
𑌨𑌸𑍍𑌮𑌦𑍍𑌗𑍁𑌰𑍂𑌂𑌸𑍍𑌸𑌨𑍍𑌤𑌤𑌂 𑌨𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 ॥

"நாராயணம் பத்மபவம் வஸிஷ்டம்
சக்திஞ்ச தத்புத்ர பராசரஞ்ச

வ்யாஸம் ஸூகம் கௌடபாதம் மஹாந்தம்
கோவிந்த யோகிந்த்ர மதாஸ்யசிஷ்யம்
ஸ்ரீ சங்கராசார்ய மதாஸ்ய பத்மபாதஞ்ச
ஹஸ்தாமலகஞ்ச சிஷ்யம்
தந்தோடகம் வார்த்திககாரமன்யா
னஸ்மத் குரும்ச்ச ஸததம் நமாமி

எனப் பாடபேத முண்டு.

## இதன் போருள்

"முதலாவது ஆசாரியர் ஸ்ரீ கைலாயத்தி லெழுந்தருளிய உமா மகேஸ்வரர், அவர் மாணுக்கர் திரு நந்திதேவர், அவர் மாணுக்கர் சனற்குமாரர், அவர் மாணுக்கர் வியாசபகவான், அவர் மாணுக்கர் சூதரிஷி, அவரது மாணுக்கர் கடவுள்நாதர், அவர் வழி வந்த மாணுக்கர் கருவூர்ச் சித்தர், அவர் மாணுக்கர் அருள் முனிவர், அவரது சிஷ்யர் கீழூர் முனிவர், அவர் மாணுக்கர் பரமுனிவர், அவர் மாணுக்கர் திருப்பனந்தாளார், அவர் மாணுக்கர் மதுரைப் புஞ்சை முனிவர், அவர் மாணுக்கர் திரு நடராஜர், அவர் மாணுக்கர் ஞானத் சிவப்பிரகாசர், அவர் மாணுக்கர் ஸ்வரூபாநந்தர், அவர் மாணுக்கர் தத்துவராயர்."

இதுவுமன்றி, சைவமுதலிய சகல மதங்களிலும் குரு பரம்பரை அனேக விதமாகச் சொல்லப்பட்டுள்ளன வாதலின், சமஸ்த தேவர்களுக்கும் சர்வ மதங்களுக்கும் பரம சிவமே நான்கு யுகங்களிலும் குரு மூர்த்தியாக எழுந்தருளிப் போதித்தா ரென்பதற்குப் பிரமாணம்:—

## ஸ்லோகம்

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

𑌤𑍍𑌰𑍇𑌤𑌾𑌯𑌾𑌂 𑌵𑍍𑌯𑌾𑌸𑌸𑍂𑌨𑍁𑌶𑍍𑌶𑍁𑌕
𑌮𑍁𑌨𑌿𑌰𑌭𑌵𑌦𑍍𑌦𑍍𑌵𑌾𑌪𑌰𑍇 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌚𑍂𑌡𑍋 ।
𑌵𑍍𑌯𑌾𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍 𑌵𑍇𑌦𑌮𑍂𑌰𑍍𑌤𑍍𑌤𑌿𑌃
𑌕𑌲𑌿𑌯𑍁𑌗𑌸𑌮𑌯𑍇 𑌶𑌙𑍍𑌕𑌰𑌶𑍍𑌶𑌙𑍍𑌕𑌰𑍋𑌽𑌭𑍂𑌤𑍍 ॥

"தைவர்வந்த்ய: க்ருதேபூத்விதிஹரிகுருராட் தக்ஷிணாமூர்த்திரூபோ
தூர்வாசாஸ் ஸத்யவாசஸ் தத இஹகிரிசோ ராமசந்த்ராதிஸேவ்ய:
த்ரேதாயாம் வ்யாஸஸூநுஸ்ஸநகமுநி ரபவத்வாபரே சந்த்ரசூடோ
வ்யாகுர்வந் வேதமூர்த்தா: கலியுகசமயே சங்கரச்சங்கரோபூத்."

## இதன் பொருள்

"அபாரகருணாசாகரராகிய சிவபெருமானுர் அன்பர்களுய்யும் பொருட்டு முதல் யுகமாகிய கிருதயுகத்தில் ப்ரஹ்மா முதலாகிய தேவர்களால் வணங்கும்படியாகத் தக்ஷிணாமூர்த்தி யென்னுங் குரு ஸ்வரூபமாக அவதரித்துக் கல்லால் விருக்ஷத்தின் கீழிருந்து ப்ரஹ்மாவினது மானஸ புத்திரர்களாகிய சனகாதி முனிவர்களுக்குத் தத்வக்ஞானத்தைப் போதித்தார். இரண்டாவது திரேதாயுகத்தில் துர்வாச மகாமுனிவரா யவதரித்து ஸ்ரீ ராமசந்திரர் முதலிய தேவதைகளால் வணங்கத்தக்கவராயும் சாபாநுக்கிரக சாமர்த்தியமுடையவராயும், சாந்த முதலிய சத்குண முள்ளவராயும் சத்யலோகத்தில் வசித்தார். மூன்றாவது துவாபர யுகத்தில் சாந்தமே வடிவமாகிய சுகமுனிவரா யவதரித்தார். நான்காவதாகிய கலியுகத்தில் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளாக அவதரித்தார்."

இதுவுமன்றி,

## ஸ்ரீ சிவமஹாபுராணம்

### ஸ்லோகம்

𑌕𑍃𑌤𑍇𑌹𑍍𑌯𑌸𑌕𑌲𑍇𑌶𑌾𑌨𑍀𑌶𑍍𑌵𑌤𑌾𑌞𑍍𑌚𑌿𑌤𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍇𑌯𑍁𑌗𑍇
𑌤𑌤𑍋𑌦𑍍𑌤𑌾𑌚𑌾𑌪𑌰𑌨𑌾𑌮𑍍𑌨𑍇𑌕𑍇𑌤𑍂𑌸𑌾𑌮𑍇𑌤𑌿𑌵𑍍𑌯𑌾𑌸𑌃 𑌕𑌲𑍌 𑌶𑌙𑍍𑌕𑌰𑌃 ॥

"ஆத்யே ஸத்வ முநிஸ்ஸதாம் விதாதி க்ஞாநத்விதீயேயுகே
தத்தோத்வாபர நாமகேது ஸுமதி வ்யாசௌ கலௌ சங்கர:"

## இதன் பொருள்

முதலாவது யுகத்தில் சிவபெருமான் கபிலாசாரியராகவும், இரண்டாவது யுகத்தில் தத்தாத்ரேய மகாமுனிவராகவும், மூன்றாவது யுகத்தில் வேதவியாசராகவும், நான்காவது யுகத்தில் ஸ்ரீ சங்கராசாரியராகவு மவதரித்துச் சாது ஜனங்களுக்கு ஞான நிலைமையைத் தெரிவித்தார்.

இவ்விதம் குரு சம்பிரதாய மிருப்பதுபற்றி ஸ்ரீ மாணிக்கவாசக ஸ்வாமிகள் தாம் அருளிச்செய்த,

## திருவாசகத்தில்

"அருந்தவருக் காலின்கீ ழறமுதலா நான்கனையு
மிருந்தவருக் கருளுமது வெனக்கறிய வியம்பேடி
அருந்தவருக் கறமுதனுன் கன்றருளிச் செய்திலனேற்
றிருந்தவருக் குலகியற்கை தெரியாகாண் சாழலோ."

எனக் கூறியருளினர். பின்னும்,

## ஸ்லோகம்

𑌯𑌦𑌾𑌯𑌦𑌾 𑌹𑌿 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌗𑍍𑌲𑌾𑌨𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤
𑌅𑌭𑍍𑌯𑍁𑌤𑍍𑌥𑌾𑌨𑌮𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌸𑍃𑌜𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍

"யதாயதாஹி தர்மஸ்ய கலாநிர்ப்பவதி பாரத
அப்யுத்தாந மதர்மஸ்ய ததாத்மாநம்ஸ்ருஜாம்யஹம்."

## இதன் பொருள்

"ஏ! பாரத ப்ராஹ்மணுதி நான்கு வருணங்களுக்கும், ஜீவர்கள் அநுஷ்டிக்கத்தக்க ப்ரஹ்மசர்ய முதலாகிய ஆஸ்ரமங்களுக்கும், அற

முதலிய நான்கு புருஷார்த்தங்களுக்கும், எந்தெந்தக் காலங்களில் கெடுதியும், அதர்மத்திற்கு அபிவிர்த்தியும் உண்டாகின்றனவோ, அப்பொழுது என்னை நான் சிருஷ்டித்துக் கொள்கின்றேன்."

எனவே, "இந்தக் காலத்தி லவதரிக்கப் போகிறேன் என்கிற நியமம் பகவானுடைய அவதாரத்திற் கில்லை" எனவும், "வேதத்திற் சொல்லப்பட்ட மோக்ஷ லக்ஷணத்தைக் காருண்யத்தால் மானிடதேக மெடுத்துத் தெரிவிப்பது கடவுளுக்கே உரியது" எனவும் ஸ்ரீ பகவத்கீதையிற் சொல்லிய அபிப்பிராயத்தின்வண்ணம், முன்பு ஓர் காலத்தில் ப்ரஹ்மா முதலிய தேவர்க ளனைவரும் கைலாயத்தில் அன்பர்களை யாட்கொள்ள விரும்பித் துரியமூர்த்தியாயும் பஞ்சமுக ஸ்வரூபியாயும் க்ருபா மூர்த்தியாயும் விளங்காநின்ற ஸ்ரீ மஹாதேவனைச் சரணடைந்து, அரிய வேத வசனங்களால் துதித்து, சிரசிற் கைகளைக் குவித்து நமஸ்கரித்து,

"ஏ பகவானே! மகா விஷ்ணுவானவர் பூர்வம் எங்களை ரக்ஷிக்கும்பொருட்டுப் புத்ததேவனாக அவதரித்து ராக்ஷசர்களை நாசஞ் செய்ததைப் பகவா னறிந்திருக்கிறீர். அப்படியாயினும், இப்பொழுது அந்த புத்த தேவனாற் செய்யப்பட்ட ஆகமாநுஷ்டானபராளாகிய பௌத்தர்கள் கர்மோபாசன ஞானத்தையும், கர்ம முதலியவைகளைச் சொல்லாநின்ற வேதாகம முதலியவைகளையும் நிந்தனை செய்து, பூமியில் மிகுந்த இருள் மூடினு லெப்படியோ, அவ்வாறு மூடிக்கொண்டார்கள். ஆகையால், அவ்விதமான துஷ்டர்களை நிவாரணஞ்செய்யும் பிரபு நீரே" யெனவும், "கலி மகிமையினால் அனேக மதங்களாய் விரிந்தும், சகல சன்மதங்களுந் தவிர்ந்தும், நல்வேள்வி யென்ப தொழிந்தும், நன்னெறி யென்ப தழிந்தும், நரக மென்பது தழைந்தும், அதில் நாச்

பலர் நுழைந்து மிருப்பதால் அவ்விதமான துஷ்டர்களை நாசஞ்செய்து ஸ்ரௌத மென்னும் வைதிக மார்க்கத்தை நிலைநிறுத்த வேண்டும்'' எனவும், பிரார்த்தனை செய்த தேவர்களைப் பார்த்துப் பரமசிவன் அருளிச் செய்ததாவது:—

''மிகுந்த இருளை மத்தியான சூரியன் நாசஞ் செய்வது போல, ப்ரகிருதியென்னு மஞ்ஞானத்தை நாசஞ் செய்யுஞ் சூக்ஷ்ம புத்தி யுடைத்தான நான்கு சிஷ்யர்களும் எனக்கு நான்கு புஜமா யிருப்பதால் மஹா விஷ்ணுவைப்போல மானிடதேக மெடுத்துச் சங்கரர் எனப் பெயர்வகித்து, மர்த்திய லோகத்தி லவதரித்து, ப்ரஹ்ம சூத்திரத்திற்குப் பாஷ்யம் விதித்து, உங்கள் மனோபீஷ்டத்தைப் பூர்த்தி செய்கின்றேன்; நீங்கள் மானுடதேக மெடுத்து என்னை யாஸ்ரயிக்கப் போகின்றீர்கள்; அப்போது உங்கள் கோரிக்கை முடிவாகும்,'' எனவும், ''கர்மம் பக்தி ஞானமென்னு மூன்று காண்டங்களால் உலக பரிபாலன நடத்தி வருவதாலும், அவற்றுள் மஹா விஷ்ணுவானவர் எனது உத்திரவின்படி சங்கர்ஷண பதஞ்சலியாக அவதாரஞ் செய்து தேவதா காண்டம், உபாசன காண்டம் எனப் பெயருள்ள யோக காண்டத்தைச் செய்திருக்கின்றன ராதலாலும், கர்ம காண்டத்திலுள்ள அருமறைப் பொருள்களை நிலை நிறுத்துத லுனக்குரியது'' எனவும், தாமரையைச் சூரியன் பார்த்தது போல, பரமனுஞ் சுப்ரஹ்மண்யரைப் பார்த்து, ''பூலோகத்தின்கண் பட்டபாதரா யவதாரஞ் செய்து ஜைமினி சூத்திரத்திற்கு வியாக்யானஞ் செய்'' எனவும் ஆக்ஞாபித்தனர்.

அவ்வுத்திரவின்படி, அருணோதய மானவுடன் இருள் நீங்கியதுபோல, ஸ்ரீ பட்டபாதர் என்னும் ஸ்வாமிகள்

அவதாரமானவுடன் பூமியின்கண் விஸ்தாரமாக விரிந்திருந்த புத்தமதம் என்னும் இருள் நீங்கவும், காலில் மிதிபட்ட சர்ப்பங்க ளெவ்வாறு கூக்குரலிடுமோ அவ்வாறு வேதவிரோதிகளான புத்தர்க ளென்னும் சர்ப்பங்கள் வேததாத்பர்யமான சித்தாந்தத்தைக் கேட்டுக் கூச்சலிடவும், புத்தர்களுடைய ஆகம சித்தாந்த மென்னும் விருக்ஷத்தைத் தமது யுக்தி யென்னுங் கோடாலியினுல் வெட்டி, குரோத மென்னும் அக்னியை விர்த்தி செய்து, அந்தக் கோபாவேசத்தினுல் ஸ்ரௌத மார்க்கமான வேதாந்தத்தைப் பூமி யெங்கும் பரவச் செய்தனர்.

அதன் பின்பு பிறவி யென்கிற சமுத்திரத்தில் மூழ்கியிருப்பவர்களைக் கரையேற்று நிமித்தம் அபார கருணசாகரனுகிய சந்திரசேகரன் இச்சித்துக் கேரள தேசத்திற் சசல மல்லது காலடி என்னும் அக்ரஹாரத்தில், புத்திரனில்லாது வருந்தி யருந்தவம் புரிந்துநின்ற சிவகுரு என்னும் ப்ராஹ்மணருடைய ஸ்வப்பனத்தில் கிருபா மூர்த்தியாகிய மஹாதேவன் எழுந்தருளி, "ஏ, "சிவகுரு! எல்லாம் அறிந்தவனும், சர்வகுண சம்பன்னனுயு மிருக்கிற ஒரு புத்திரன் வேண்டுமானுலுங் கொடுக்கின்றேன்; அல்லது, விபரீதனும், அற்ப குணவானும், அதிக ஆயுளுடையவனுயு மிருக்கிற அனேகம் புத்திரர்கள் வேண்டுமானுலுங் கொடுக்கின்றேன்; இவ்விரண்டிலெதை நீ யிச்சிக்கின்ருய்?" எனக் கேட்க, "சர்வக்ஞனும் சகல சத்குணங்களோடுங் கூடினவனுயு மிருக்கிற ஒரு புத்திரன் வேண்டும்" எனப் பிரார்த்திக்க, "அப்படியே உண்டாவான்; நீங்களிருவரும் கிருகத்துக்குப் போங்கள்" என்று அனுக்கிரகஞ் செய்து பரமசிவன் மறைந்தனர்.

அங்ஙனம் பரமசிவனுடைய திருவருளைப் பெற்றபின்னல், பார்யாளுந் தானும் கிருஹத்திற்கு வந்து, வேத வேதாந்த பராயணர்களான ப்ராஹ்மணர்களைத் தக்ஷிணையினலும் அன்னத்தினலுந் திருப்தி செய்து, மிச்சமான அன்னத்தைச் சிவகுரு புசித்தார்; அவர் பத்தினியாகிய ஆர்யாம்பாளும் புசித்தனள். அப்படிப் புசித்த ஆர்யாம்பாளது ஆகாரத்துள் பரமசிவ சம்பந்தமான தேஜசு பிரவேசித்தது. அதன் பிறகு, ஆவ் ஆர்யாம்பாள் பரமசிவ ஸ்வரூபமான கர்ப்பத்தைத் தரித்து மெள்ள விர்த்தியடைந்தெப்படியிருந்த தென்றல், மத்தியான சூரியனைப் பார்ப்பவர்களுடைய கண்களெப்படிக் கூசுமோ, அப்படிப்போல ஆர்யாம்பாளைப் பார்ப்பவர்களுடைய கண்கள் கூச்சமடைந்தன. இது ஆச்சர்யமல்லவா? எனெனில், ஸ்வர்க்க முதலிய பதினன்கு லோகங்களையும், அஷ்டமூர்த்தங்களையும், கர்ப்பத்திலிருக்கிற பரமசிவ தேஜசானது சுயந்துகொண்டிருக்கின்றது. அவ்விதமான தேஜஸை ஆர்யாம்பாள் சுமந்து மெள்ள நடக்கின்ற ளென்றல் இது பெரிய ஆச்சர்யமன்றே? அதன் பின்னர், பார்வதி சுப்ரஹ்மண்யரை ஈன்றதுபோல, ஆர்யாம்பாள் ஸ்ரீ சங்கராசாரியர் எனப் பெயருள்ள மஹாதேவனைப் புத்திரனுகப் பெற்றுள்.

இப்படிச் சொன்னதன் தாத்பர்யம் யாதெனில், சதாசிவனே தனது மாயையினல் கர்ப்பத்திற் பிரவேசித்தது போலும் பிறந்தது போலும் பார்ப்பவர்களுக்குத் தோற்றியதே யன்றி அவர் மாயாதீத ராதலின் பிரவேசிக்கவில்லையென்க.

"அப்படியானல் கர்ப்பத்திற் பிரவேசித்துப் பிறந்ததாகச் சொல்லியிருக்கிறதே" எனின்,

"அந்தமில் பெருமை யழலுருக் கரந்து
சுந்தர வேடத் தொருமுத லுருவுகொண்
டிந்திர ஜாலம் போலவந் தருளி
யெவ்வெவர் தம்மையுந் தன்வயிற் படுத்துந்
தானே யாகிய தயாபர னெம்மிறை."

## இதன் பொருள்

"ஆதிமத்யாந்த ரகிதராயும், திவ்யக்ஞானிகளாகிய பெரியோர்கள் தங்கள் ஞான நேத்ரங்களால் தரிசிக்கத்தக்க பெருமை யுடைத்தானவராயும் விளங்காநின்ற சிவபெருமான் ஒப்பற்ற தமது அகண்ட ஸ்வயம்பிரகாசமான ஞானவடிவத்தை மறைத்து, ஊனநேத்ர முடையவர்களது கண்களுக்கு அழகையுடைத்தான மனிதனுக வடிவெடுத்து, இந்திரஜாலவித்தை காட்டுகிற புருஷன் பார்ப்பவர்களனைவருக்கும் இல்லாத அத்புதத்தை யுள்ளதாகக் காட்டி மகிழ்ச்சியடையச் செய்வதுபோலக் காட்டி லிருந்த நரிகளைக் குதிரைகளாகச் சிருஷ்டித்துப் பாண்டியன் முதலானவர்களுக்கு மெய்போலக் காட்டிக் களிக்கும்படி செய்தது பொய்யாயினும், பிட்டுவாணிச்சி யம்மையார் நிமித்தம் கூலியாளாக வந்து வைகையை யடைத்த காலத்துச் சிவபெருமானது தேகத்தி லடித்த பிரம்படியானது சகல வுயிர்களினுடைய சரீரங்களிலும் பட்டபடியால் யாவரும் ஆச்சரிய மடைந்து "சர்வாந்தர்யாமியாக நிறைந்திருப்பவர் சிவபெருமானே" எனவும், "அவரைச் சமஸ்தமானவர்களும் துதித்து நற்கதி யடையவேண்டும்" எனவும், "தனது எதார்த்த மகிமையை யாவருக்கு முண்மையாகக் காட்டிப் பக்குவாபக்குவிகளாகிய சகலமானவர்களையுந் தன் வசமாகச் செய்துகொள்ளத் தக்க சர்வ சக்தியும் அபார கருணையு மமைந்துள்ள சர்வஜீவ தயாபரனே எமது கடவுள்."

என்று ஸ்ரீ மாணிக்கவாசக ஸ்வாமிகள் தமது திருவாசகத்தில் திருவாய் மலர்ந்தருளிய அபிப்பிராயத்தை யாலோசிக்குமிடத்து, "தேகேந்திரிய ப்ரபஞ்ச முதலிய வைகளுக்குக் காரணமாகிய மாயா சக்தியினு லுயிர்களுக்குப் பந்த வினைவும், சிற்சக்தியினுல் மோக்ஷமும்" எனப்

பெரியோர்கள் சொல்லுகிறபடியினாலும், பந்த மோக்ஷ மிரண்டும் மாயா வசப்பட்டிருப்பவர்களாகிய உயிர்களுக் கேயன்றி மாயாதீதனாகிய பரமசிவத்துக்கு இல்லை யாதலா லும், இவ் வுயிர்களின்மேற் கருணை வைத்து மாயா சக்தி யினால் குதிரைக்கு எஜமானன் போல் இந்திர ஜாலமாகிய ஸ்தூலதேக மெடுத்துக் குதிரை கொண்டு வந்ததும், சிற் சக்தியினால் தன்வயத்தன் முதலிய எண் குணங்களில் முற்று முணர்த லென்னும் சர்வக்ஞத் தன்மையை யாவ ருக்குந் தெரியும்படி சூட்சுமமான இந்திர ஜாலங் காட்டிய தும், பின்னர் இவ் விரண்டையு மறைத்து யாதொரு பற் றின்றித் தானே தானாக இருந்ததும் எப்படியோ, அது போன்று, சிவபெருமானார் தமது மாயா சக்தியினால் ஸ்ரீ சங்கரர் என்னுந் தேக மெடுத்து ஸ்ரீ ஜகத்குரு எனப் பெயர் தரித்து, திக்கு விஜயஞ் செய்து அனேக மகிமை களைப் பலருக்குங் காட்டியும், தமது சிற்சக்தியினால் சைவ முதலிய ஆறு மதங்களுக்குங் கடவு ளொருவனே யெனத் தமது சர்வக்ஞத்துவத்தைத் தெரிவித்தும், "இஃது யாவ ருக்கும் பொதுவாயும் மதங்களுக் கெல்லா மதீதமாயு முள்ளது" என அத்வைத பாஷ்யம் விதித்தும், அதிலுள்ள பூர்வார்த்தம் உத்தரார்த்தங்களைச் சிஷ்யர்களுக்குப் போதி த்தும், பின்னர் யாதொரு பற்று மின்றித் தமது எதார்த்த வடிவமான பரமசிவத்தில் லயித்தும், அதுவே தானாக விளங்கின ரென்க.

இப்படி யாது காரணத்தாற் சொன்ன தெனில்?

திருவாசகம் - இரண்டாவது அகவல்

"அக்தமி லாரிய னாயமர்ந் தருளியும்
வேறுவே றுருவும் வேறுவே றியற்கையும்

நூறுநூ றாயிர மியல்பின் தாகி
யேறுடை யீசனிப் புவனியை யுய்ய" எனவும்,

திருவாசகம் - மூன்றவது அகவல்

"அறுவகைச் சமயத் தறுவகை யோர்க்கும்
வீடுபே றாய்நின்ற விண்ணோர் பகுதி." எனவும்,

தாயுமானவர் ஆனந்தமானபரம்-மூன்றவது பாடல்

"ஆறுசம யங்கடொறும் வேறுவே றாகிவிளை
யாடுமுனை யாவ றறிவார்?" எனவும்,

திருமூலநாயனர் திருமந்திரம்

"ஒன்றதே பேரூர் வழியா றதற்குள
தென்றிது போலு மிருமுச் சமயங்கள்" எனவும்,

"குருவே சிவமெனக் கூறின னந்தி" எனவும்,

இப்படியே அநேகம் பெரியோர்கள் தங்களுக்கும் பொதுவா யிருப்பவர் "ஒரு கடவுளே" எனவும், "அக் கடவுளே ப்ரஹ்மா முதலிய அனேக மூர்த்திகளாகவும், அறிவுக்கு அறிவாகவும் ஞானசாரியராகவுந் தோன்றி யுலக பரிபாலனம் செய்கிறர்" எனவுஞ் சொல்லி யிருப்பதால் கூறியதென்க.

இப்படியிருக்க, "இவ்வுலகத்திலுள்ள இருளை யகற்றி உயிர்களை மகிழ்ச்சி யடையச் செய்ய சூரிய னுதயமானது போல, சகல வுயிர்களிடத்திலுள்ள அஞ்ஞானந்தகாரத்தைக் கெடுத்து, சுக்ஞான மென்னுங் களிப்பை யடையச் செய்விக்கும் பொருட்டு உதயமான ஞானசூரியனுகிய ஸ்ரீ சங்கராம்சமான குழந்தையைப் பார்க்க வந்த பந்துக்கள்

சினேகிதர்கள் யாவரும் மிகுந்த சந்தோஷ மடைந்தது மன்றி, பகற்காலத்திலும் இரவிற் சூரியப் பிரகாச மில்லாத காலத்திலும் குழந்தை யிருக்கின்ற வீட்டில் அதிக மான தேஜசு கண்ணுக்குத் தோன்ற, அதனைப் பார்த்துப் 'பிரசித்தமான சாக்ஷாத் சங்கராவதாரமே இக் குழந்தை' என் றெண்ணி சங்கரன் என்று பெயர் வைத்தனர். அதன் பின்பு, ஸ்ரீ மகாவிஷ்ணுவானவர் பத்மபாதராகவும், வாயு பகவான் ஹஸ்தாமலகராகவும், ப்ரஹ்மா ஸுரேஸ்வராசாரியராகவும், ப்ருஹஸ்பதி ஆனந்தகிரியாகவும், சூரியன் சகந்தனராகவும், வருணன் சிற்சுகாசாரியராகவும், இந்திரன் இராஜாவாகவும், மற்றத் தேவர்க ளெல்லோரும் ஸ்ரீ சங்கருடைய சரணாரவிந்தத்தைச் சேவிப்பதற்கு ப்ராஹ்மணருடைய புத்திரர்களாகவு மவதரித்தார்கள்'' எனச் சங்கர விஜயத்திற் சொல்லி யிருக்கின்றது.

அங்ஙனஞ் சொல்லுவதை அங்கீகரித்தல் கூடாது. ஏனெனின், ஸ்ரீ சங்கராசாரியருக்கு ஜகத்குரு என்று பெயரிருப்பதனு லவரைச் சகலமான ஜாதியார்களும் வணங்குவார்களே யன்றிப் பிராஹ்மணர் மாத்திரம் நமஸ்காரஞ் செய்யக் கூடுமென்றும், மற்ற வருணத்தவர்கள் வணங்கக் கூடாதென்றும் நிபந்தனை யில்லை யாதலானும், ப்ராஹ்மணர் முதலிய ஜாதி பேதங்கள் இவ்வுயிர்களின் கற்பனையே யன்றித் தேவர்களுக்குச் சகலமான வருணமுஞ் சமமாதலானும், எந்தக் குலத்திலும் தேவர்கள் அவதரிப்பார்களென்க.

இங்ஙனந் தேவர்களுக் கெல்லாந் தேவனான மஹா தேவன் தமது மாயையினால் மானுட ரூபமாகச் சிவகுருவினது புத்திரரா யவதரித்து, அவரால் ஜாதகர்மம் நாமகரணம் சௌளோபநயன முதலிய சடங்குகளை நிறைவேற்

றப் பெற்று, ஒரு வருஷத்தில் சகல அக்ஷரங்களையும் குலத்திற் குரிய பாஷையையும் கிரகித்தனர். அதுவுமன்றி, ஒருவர் சொல்லக் கேட்காமலும் குருவில்லாமலும் சகல வேதாகம முதலிய கிரந்தங்களைப் படித்துத் தமது சர்வக்ஞத்வத்தை யாவருக்குந் தெரியும்படி காட்டிக்கொண்டிருந்தனர்.

இவ்விதமான ஆச்சரியங்களைச் சகலரும் பார்த்து மகா சந்தோஷ மடைந்திருக்குங் காலத்தில் சிவகுரு காலஞ் சென்றனர். அதன்பின் ஸ்ரீ சங்கரபகவான் வேத மரியாதையை யாவருக்குந் தெரிவிக்க வந்தவராதலின்; "மாத்ருதேவோபவ" என்னும் வேதவாக்யப்படித் தமது தாயைச் சேவித்தும், சூரியனைப் பூஜித்தும், சூரியனைப் போல மிகுந்த தேஜஸை யுடையவராக விளங்கினர்.

அஃதன்றியும், சூரிய னுதயமானால் தாமரை முதலிய புஷ்பங்கள் மலர்வன போன்றும், சகல உயிர்களும் மகிழ்ச்சி யுறுவன போன்றும், ஞானசூரியனாகிய சிவபெருமான் அவதாரமான காலத்திற் சகல பெரியோர்களும் சகல மனிதர்களுஞ் சந்தோஷ மடைந்தனர். இப்படிப்பட்ட அற்புதத்தைப் பொதிகையங்கிரியில் வாசஞ் செய்யாநின்ற அகஸ்திய மகாமுனிவ ருணர்ந்து ஸ்ரீசங்கரரைப் பார்க்க விருப்ப முற்று அவர் வசிக்குங் கிருஹத்திற்கு எழுந்தருளினர்.

அங்ஙன மெழுந்தருளிய அகஸ்தியமுனிவரை ஸ்ரீ சங்கராசாரியர் பய பக்தி விஸ்வாசத்துடன் வந்தனை வழிபாடு செய்தனர். அப்படியே சங்கராது தாயாகிய ஆர்யாம்பாளுந் தெண்டஞ் சமர்ப்பித்து, "ஏ முனி ஸ்ரேஷ்டரே! எனது புத்திரனுக்கு ஆயுட் பிரமாண மிவ்வளவெனச் சொல்லவேண்டும்" என்று பிரார்த்தனை செய்து கேட்ட

னள். அதனை அகஸ்தியருணர்ந்து, "உன் புத்திரனுக்கு இப்போது எட்டு வயதாயிற்று; இன்னம் எட்டு வருட மிருக்கின்றது. ஆகலின், பதினாறு வயது பரியந்த மிருப்பானேயன்றி அதற்குமேல் விவ்விட மிருப்ப தில்லை" எனச் சொல்லிப் பொதிகைக்கு எழுந்தருளினர்.

அந்த வார்த்தையைக் கேட்டு மிகவும் துக்க மடைந்ததைச் சங்கரர் பார்த்து, "ஏ அம்பா! நீ துக்கப்பட வேண்டாம்; நான் சந்யாசாஸ்ரமத்தை வகித்து மோக்ஷ மடையும் பொருட்டுப் பிரயத்தனஞ் செய்கின்றேன்" எனக் கூறினர். அங்ஙனஞ் சொன்ன வார்த்தையைக் கேட்டவுடனே, கண்களில் நீர் ஆறுப் பெருக அதிக வருத்த மடைந்து, "ஏ புத்திரா! நீ விவாகஞ் செய்துகொண்டு புத்திரப்பே றுண்டாகிய பின்னர் சந்யாசத்தை அங்கிகரிக்க வேண்டும்; இப்படியே முன்னோர்களிருக்கிறகிரமம்" என்று தாயார் சொன்னதைக் கிஞ்சிற்றும் அங்கிகரியாமல் மாதாவுக்குத் தத்வோபதேசஞ் செய்தனர்.

இப்படி யிருக்கிற காலத்தில் ஒருநாள் ஸ்நானத்திற்குச் சென்று ஒரு தடாகத்தில் நீராடுகையில் தமது காலை ஓர் முதலை பிடித்திழுப்பதை யுணர்ந்து, சகலேந்திரியப் பற்றுக்கள் தவிர்ந்து மனதிறைற் சந்யாசஞ் செய்தனர். இவ்வாறுனசந்யாசஞ்செய்தவுடனே முதலையானது ஸ்ரீசங்கரர் காலை விட்டுவிட்டது. அதன்பின் தாயினுடைய உத்தரவு பெற்றுக்கொண்டு ஆதிசேஷாவதாரஸ்வரூபராயும், பதரிகாஸ்ரமத்தில் வாசஞ் செய்பவராயு மிராநின்ற ஸ்ரீகோவிந்த பகவத்பாதர் என்னும் ஸ்வாமிகளிடஞ் சென்று, அவரால் வேதவிதிப்பிரகாரம்சந்யாசாஸ்ரமம்பூண்டு, ப்ரஹ்மசூத்ர முதலிய சாஸ்திரங்களின் அர்த்தத்தை யுணர்ந்து, அவ

ருத்திரவு பெற்றுக்கொண்டு ஸ்ரீ காசி க்ஷேத்திரத்தையடைந்து நிலைபெற்றிருக்கு நாளில், மாத்தியான்ஹிக நிமித்தங் கங்கையை நோக்கிப் போகுங் காலத்து, ஸ்ரீ விஸ்வேஸ்வரன் சண்டாள வேஷந் தரித்து ஸ்ரீ சங்கரர் முன்பு தோன்றினர். அவரைச் ஸ்ரீ சங்கரர் பார்த்து, "தூரமாகப் போ" என்று கூறினர்.

அங்ஙனஞ் சொன்ன வார்த்தையைப் பரமசிவன் கேட்டு, "அன்னமயகோச முதலிய பஞ்ச கோசங்களில் எதைப் போகச் சொன்னுய்? அன்னமயகோசஞ் சட மாதலின் போகாது; மற்றக் கோசங்களு மிப்படியே; அல்லது, பஞ்சகோச விலக்ஷணனுகிய ஆத்மாவோவெனின், சித்து; அந்த சித்து உன்னுடைய அந்தக்கரணத்திலும் எனது அந்தக்கரணத்திலும் பரிபூர்ணமாக நிறைந்திருக்கின்றது. அவ்விதமான ஆத்மாவுக்குப் போதல் வருதல் முதலிய தொழில்க ளில்லையெனத் தெளிந்த வேதாந்தியான உனக்கு யாதொரு கற்பனையு மில்லாதிருக்கச் 'சண்டாளன்' என்றும், 'ப்ராஹ்மணன்' என்லும் பேதபுத்தி என் வந்தது?" என ஆத்ம லக்ஷணத்தைச் சொன்னவுடன், அந்த வார்த்தையை ஸ்ரீ சங்கரர் கேட்டுத் தமது தேகத்தை மறந்து, மிகுந்த ஆநந்தத்துடன், "சண்டாளனுகட்டும், ப்ராஹ்மணனுகட்டும், எந்த ஜாதியானுைலும் ப்ரஹ்மக் ஞான மறிந்தவனே குரு" என்று மநீஷாபஞ்சகம் எனப் பெயருள்ள ஐந்து ஶ்லோகங்களில் தகுந்த விடை கூறினர்.

அங்ஙனஞ் சொல்லிய சமபாவத்தைச் சாக்ஷாத் விஸ்வேஸ்வரன் கேட்டு மகா ஆனந்த மடைந்து, தமது நிஜ ரூபத்தை யெடுத்து ஸ்ரீ சங்கரரது சிரசில் தமது ஹஸ்தத்தை வைத்து அநுக்ரஹஞ் செய்து, "ப்ரஹ்ம சூத்ர

ரத்திற்குப் பலரும் பலவிதமான அர்த்தம் பண்ணுகின்றன ராதலால் அதனது வாஸ்தவமான அர்த்தத்தை நீ செய்யக் கடவாய்!'' என்று திருவாய் மலர்ந்தருளி அந்தர்த்தான மாயினர்.

ஸ்ரீ சங்கரர் தமது பன்னிரண்டாவது வயதில் ப்ர ஹ்ம சூத்திரத்திற்கு உரையெழுதி முடித்து, ஸ்ரீ விஷ்ணு வின் அவதாரமாகிய ஸ்ரீ பத்மபாதர் முதலிய மாணுக்கர்களு க்குப் பிரஹ்ம சூத்திரார்த்தத்தைப் போதித்துக்கொண் டிருக்கிற சமயத்தில், ஸ்ரீ வேதவியாசர் வயது முதிர்ந்த ப்ராஹ்மண வடிவமாக ஸ்ரீ சங்கரரிடஞ் சென்று தமது நூலிற் சில சூத்திரங்களுக்குப் பொருள் வினவினர். அவற் றிற்குக் குற்றமில்லாத விடை கூறியதை ஸ்ரீ வியாச பக வான் கேட்டு அத்யந்த சந்தோஷமடைந்து, "ஐயா! ஈஸ் வரன் உமக்கு விதித்த பதினறு வயது முடிந்துவிட்டமை யால், நீர் இச் சரீரத்தோடும் இவ் வுலகில் ஜீவித்திருக்கு மாறு, இன்னும் உமக்குப் பதினறு வயது கொடுத்தேன்; இப் பாஷ்யத்தை இவ்வுல கெங்கும் பிரசாரஞ் செய்து, இச் சூத்திரங்க ளென்னும் அம்பெய்து, துர்மதங்களைக் கொய்து, அத்வைத மழை பெய்து, பின்னர் இந் நரவுட லோடுங் கைலையை யடைவீராக'' என வாழ்த்தி அந்தர்த் தான மாயினர்.

இது நிற்க, சிவபெருமானது கட்டளையினல் இட பூமியின்கண் சுப்ரஹ்மண்யர் ஸ்ரீ பட்டபாதர் எனப் பெயர் கொண் டவதரித்து, அளவில்லாத துர்மதங்களைக் கெடு த்து, புத்தர்களைக் கற்செக்கிலிட்டு, வேதத்தில் விதிக்கப் பட்டுள்ள கர்மங்களை யுலகத்திலேற்றி, பிராயச்சித்த காண் டத்தில் தமக்குள்ள நம்பிக்கையை வெளியிடக் கருதி,

தமது குரு மதத்திற்கு வேற்றுமை செய்ததற்கா யுமி நெருப்பிற் பிரவேசித்திருந்தனர். இதனை ஸ்ரீ சங்கராசாரி யர் கேள்வியுற்று, அவரிடஞ் சென்று, "துறவறத்தை நிலைநிறுத்தக் கருதி யான் பிரசங்கிக்க வந்தேன்" என்று சொல்ல, ஸ்ரீபட்டபாதரும், "ஏ சங்கரா! குருத்ரோகம் ஈஸ்வர நிராசனம் ஆகிய இவைகள் நிவாரண மாகும்பொரு ட்டுப் பிராயச்சித்த காண்டத்தில் துஷானலப்ரவேசஞ் சொல்லியிருப்பதனுல், இப்போது உம்மைத் தரிசனம் பண்ணியவுடனே அத் தோஷங்கள் நிவர்த்தியாயின. ஏ பகவான்! உமது ப்ரபாவத்தை யான் அறிவேன்; சகல சராசரங்களும் உம்மிடத்தி லடங்கவும், மறுபடியும் அவற் றைப் பூர்வ மிருந்ததுபோல ஸ்ருஷ்டிக்கவும் சாமர்த்திய முடைய வுமக்கு என்னைக் கிருதார்த்தனுகச் செய்வது ஆச் சரியமன்று; ஏ யதி ஸ்ரேஷ்டரே! காசியில் தாரக மந்திர த்தை யுபதேசித்ததுபோல எனக்கு ப்ரஹ்மோபதேசஞ் செய்யவேண்டும்" எனவும், "எனது சீடனுகிய விஸ்வ ரூபன் கர்மயோகமான பிரவர்த்தி மார்க்கத்தில் மிகவுஞ் சமர்த்தன், நிவர்த்தி மார்க்கத்தில் கிஞ்சிற்றும் விருப்ப மில்லாதவன்" எனவும், "அவனை ஜயித்தால் யாவரையும் ஜயித்ததுபோலாம்" எனவும் பிரார்த்திக்க, ஸ்ரீ சங்கரா சாரியர் அவர்க்கு வேதாந்தோபதேசஞ் செய்து, மெய்ஞ் ஞான விளக்கேற்றி, சிருங்கேரியில் ப்ரஹ்மாவதாரமாகிய விஸ்வரூபன்: தன்னை யொருவரும் வந்து காணுதிருக்கும் படி சூரியமண்டல மளாவிய மாளிகை யமைத்து அதில் வாசமா யிருப்பதை ஸ்ரீ சங்கர ருணர்ந்து, தமது யோக சித்தியால் அவனது கிருகத்தில் புகுந்து, சந்நியாசத்தை யிகழ்ந்துகொண்டிருந்த விஸ்வரூபனென்னு மண்டனுசாரிய னது கிருகமடைந்திருந்த வியாசாது வசனத்தால அம்

மண்டனன் பார்யாளாகிய சரசவாணியை மத்யஸ்தமாய்ச் செய்துகொண்டு, "மண்டனன் தோல்வி யடைவானேல் அவன் துறவறம் பெறவேண்டும்" எனவும், "அவன் ஜய மடைந்தால் எனது அரிய சந்யாசாஸ்ரமத்தை யிழந்து யான் இல்லறத்தோனுவேன்" எனவும், பிரதிக்ஞை செய்து கொண்டு, நெடுநாள் வாது செய்து அவனை வென்றனர்.

பின்பு விஸ்வரூபன், துறவற நிலையை அங்கீகரிக்க விருப்புற்று நின்றமையை யறிந்து, சத்திய லோகத்திற் கெழுந்தருள எத்தனித்த ஸ்ரீஸரஸ்வதியை நோக்கி, "நீயே னும் உனது கணவன்பொருட்டு வாது செய்து வெற்றி பெறுவாயேல், யான் செய்துகொண்ட சபதத்தை நிறை வேற்றுவேன்," என்றனர். அதனைக் கேட்ட சரசவாணி யும் வாதுசெய்யத் தொடங்கிப் பல சாஸ்திரார்த்தங்களைப் பற்றிப் பிரசங்கஞ் செய்ததில், 'அவரை வெல்லுவ தரி தாம்' என வுணர்ந்து, கொக்கோக சாஸ்திரத்திலுள்ள ரகஸ்ய விஷயங்களை வினவத்தொடங்க, ஸ்ரீ ஸங்கரயோகீந் திரர், 'சில காலஞ் சென்ற பின்னர் இந்த நூற்களிலும் வெற்றி பெறுவேன்; சிலகாலந் தரல்வேண்டும்' என விடை பெற்றுக்கொண்டு, அளவில்லாத பத்மினிப் பெண் களினுடைய அருங் கணவனுகிய அமருகன் எனப் பெய ருள்ள அரசன் இறந்ததைக் கண்டு, தமது உடலை ஓர் மலைக் குகையில் வைத்து, "இதற்கு ஏதேனும் கெடுதி நேரிடுமாயின் எனக்கறிவிப்பீர்கள்" எனத் தமது சீடருட் சிலரை யவ்விடத்தில் வைத்துத் தாம் பரகாயப் பிரவேச வித்தையால் அவ் வமருகராஜனுடைய தேகத்திற் புகுந் தனர்.

அங்ஙனம் பிரவேசித்தவுடனே "அமருகன் பிழைத் தெழுந்தான்" என்று மந்திரி முதலானவர்க ளனைவரும்

உளங் களிக்கவும், பத்மினிப் பெண்களினது முக நெகிழவும், அரசனது மாளிகையுட் புகுந்து, அம் மாதரிடஞ் சகல சுகங்களையு மனுபவித்து நிற்க, அரசாங்கத்திலும் விடய சுகங்களிலும், அமருகனிலும் பதின்மடங்கு சிறந்திருப்பதை யுணர்ந்து, அங்கிருப்பவ ரனைவரும், "அமருகன் பிழைக்கவில்லை; இவர் தேவனோ? அல்லது அரிய தவத்தினையுடைய யோகியோ?" எனக் கலக்கமடைந்து, அப் பட்டணத்திலுள்ள பிணங்க ளனைத்தையுஞ் சுட்டெரிக்கும்படி ஓர் கட்டளையிட்டனர்.

குடித்தனக்காரர்கள் அம் மந்திரியினுடைய ஆக்ஞையைச் சிரசால் வகித்துப் பல இடங்களிலுந் தேடியோடிப் பரிசோதித்து ஒன்றன்பின் ஒன்றாய்ப் பல சவங்களை நெருப்பில் வைத்துக் கொளுத்தி நீறாக்கிக்கொண்டே வருகையில், ஆசாரியனது உடலெனப் பேரன்பினோடுங் கண் மூடாமற் காத்திருக்கிற ஸ்ரீ பத்மபாதர் முதலிய சீடர்களிருந்த மலைக் குகையை யடைந்தார்கள். அக் குகையினுட் புகுந்து, ஒரு சவத்தையும் அதற்குக் காவலாயிருந்த சிலரையுங் கண்டு, "நீர் என்ன குலம்? உமது ஊர் யாது? உமது பெயர் யாது? இந்தக் குகையிற் பிணங் காப்பது என்ன காரணம்பற்றி!" எனச் சொல்லிக்கொண்டே அத் திருமேனியை யெடுத்துக்கொண்டு வெளியே வரத் தொடங்கினர்.

அப்பொழுது தமது உயிரிலுஞ் சிறந்ததாகிய குருவினது தேகத்தைக் காத்திருந்த சீடர்களுடைய கோபத்தை வீணாக்கி, ஸ்ரீ சங்கரரது தேகத்தைப் பிடுங்கி நெருப்பில் வைத்தெரிக்கையில், அச் சீடர்க ளிவ்வரலாற்றைத் தமது குருவாகிய ஸ்ரீ சங்கராசாரியருக்குச் சுலோக மூலமாய்த் தெரிவித்தனர். அதனைக் கேட்ட ஸ்ரீ சங்கரர் அந்த ராஜ

னுடைய தேகத்தை விட்டுவிட்டு எரிக்கப்படுகின்ற தமது உடலை யடைந்து, இலட்சுமி ந்ருசிம்ஹன் அருளால் முன் போலச்செய்துகொண்டு, அதன் பின்பு ஸ்ரீஸரஸ்வதிதேவியி னிடம் வந்து சகல நூற்களிலும் அத்தேவியை வென்றனர். அங்ஙனம் ஜயமடைந்ததைச் சரசவாணி கண்டு மிகவுங் களிப்படைந்தனள்.

அவ்வாறு மகிழ்ச்சி யடைந்த ஸ்ரீஸரஸ்வதியைத் தமது ஆஸ்ரமத்தில் நிலையா யிருக்கவேண்டுமெனப் பிரார்த்திக்க, அத்தேவியு மிசைந்து, "அவ்வாறுக" என்றனள். பின்னர், மண்டனனுக்குத் துறவறமும், விஸ்வரூபன் என்னு நாம முங் கொடுத்து, அவர்களோடுங் கலைக்கோட்டு மாமுனிவர் ஆஸ்ரம மடைந்து, அங்குள்ள ஸ்ருங்கேரியில் அத் தேவி யைப் பிரதிஷ்டை செய்து, அநேக உற்சவங்களை யேற் படுத்தி, அதற் கிணங்க வித்யாபீடம் ஒன்று கற்பித்து, அங்கிருந்த சிஷர்களுக்குப் பாடம் நடப்பித்துக்கொண்டு, சிலகால மிருந்தனர்.

பிற்காலத்தில் வியாக்கியான சிம்ஹாசனம் எனப் பெ யர் பெற்ற அந்த வித்யாபீடத்தில் ஸ்ரீ சுரேஸ்வராசார்யரை நிலைநிறுத்தித் தாம் திக்கு விஜயத்திற்காகப் பிரவேசித்து, திருவேங்கடம், திருக்காளத்தி, அகோபில முதலிய திவ்ய க்ஷேத்ரங்களை யடைந்து, அவ்விடங்கடோறும் பக்திரப் பிரதிஷ்டை முதலியன செய்துகொண்டே காஞ்சிநகரஞ் சேர்ந்து, அப்பொழுது அங்குச் செங்கோல் நடாத்திய இராஜசேன அரசனால் அந்த நகரத்தைக் கட்டுவித்து, ஸ்ரீ வரதராஜப் பெருமாளுக்கும், ஸ்ரீஏகாம்பரநாதருக்கும் கோ புர முதலியவைகளை யுண்டாக்கி, உக்கிரகலைகளும், உன்னத சித் ஸ்வரூபியும், உயர்நிலை யுடையவளுமாய் விளங்கிய

ஸ்ரீ காமாக்ஷியை ஒருருவமுடையவளாகச் செய்து, அவ்வம்மனது உக்கிர மடங்கும் பொருட்டுத் திருச்சக்கரமொன்று பிரதிஷ்டை செய்து, ''சகலமானவர்களும் அவரவர்களதுவர்ணாசிரமதர்மத்தின்படி நடக்கவேண்டும்'' என விதித்து, பாவத் தொழில்களை யொழித்து, சைவமுதலிய ஆறு மதங்களையும் ஸ்தாபித்து, மேற்கில் துவாரகையில் ஸ்ரீ ஹஸ்தாமலகரையும், கிழக்கில் ஜகந்நாதத்தில் ஸ்ரீ பத்மபாதரையும், வடக்கில் பதரிகாஸ்ரமத்தில் ஸ்ரீ தோடகாசாரியரையு மிருக்கச்செய்து, இமயமலைமுதல் இராமேஸ்வரம் வரையிலுள்ள ஜனங்களுடைய வர்ணாஸ்ரம தர்மங்களை வழாதுகாக்க ஸ்ரீ சுரேஶ்வரனென்னு மாணாக்கனுக்குமுக்கியாதிகாரங்கொடுத்துச் சிருங்கேரியி லிருக்க ஆக்ஞாபித்து, மற்றுமுள்ள சீடர்களுடன் காஸ்மீர தேசஞ்சென்று, சர்வக்ஞ பீடமேறித் தத்தாத்ரய குகையினின்றும் தமது ௩௨-வது வயதில் ஸ்தூலதேகத்துடன் கைலையை யடையக் கருதி, ப்ரஹ்மா முதலிய தேவதைகளாலும், நந்தி முதலாகிய கணங்களாலும் எதிர்கொண் டழைக்கப்பெற்றுத் திருக்கைலையை யடைந்தனர் என மாதவீய சங்கர விஜயத்திற் கூறப்பட்டிருக்கின்றது; இவ்வாறே சங்கரவிஜய விலாசம், சிவரஹஸ்யம், ப்ருஹத் சங்கரவிஜயம், மடாம்நாய முதலிய பலவித ப்ரமாண நூற்களிலுங் கூறப்பட்டிருக்கின்றது. அவைகளில் விரிவாகச் சொல்லி யிருப்பதால் யாவருக்குந் தெரியும்படி இங்குச் சுருக்கமாகத் தெரிவித்தனம்.

இங்ஙன மிருக்க, 'ஸ்ரீ ஶங்கராசாரிய ஸ்வாமிகள் தாமெடுத்த மானுட வுடலோடு கைலையங்கிரி யடைந்தார்' எனக் கூறியதனைச் சிலர் ஆக்ஷேபனை செய்வ ராகையால் அதனை யங்கீகரித்தல் கூடாது. ஏனெனின், ஸ்ரீ சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் முதலிய (௬௩) நாயன்மார்களும்,

நம்மாழ்வார் முதலாகிய (கஉ) ஆழ்வார்களும் ஈஸ்வராதிக ளுத்தரவினு லிவ்வுலகின்கண் அவதரித்து, சகலமானவர்க ளுக்குங் கர்மம் பக்தி யோகம் ஞானமென்னும் நன்னெறி யைச் செய்து காட்டிப் பின்னுள்ளவர்களு முப்பும்பொருட் டுத் தெரிவித்தவாறுபோல, ஆதி ஸங்கராசாரிய ஸ்வாமிக ளும் ஈஸ்வராம்சமாக அவதரித்து, கர்மம், பக்தி, யோகம், ஞானம் எனப்படுகிற நான்கினையு மூலகத்தா ரனுஷ்டிக் கும்படி செய்வித்தும், சைவமுதலிய ஷண்மதங்களை ஸ்தா பித்தும், அந்த ஆறு மதஸ்தர்களுக்கும் ஏனைய சகல சம யத்தவர்களுக்கும் பொதுவாக அத்வைத வித்தையை வெளிப்படுத்தியு மிருப்பதனுல் ஜகத்குருவென்று யாவ ருங் கூறுவர்.

மேற்கூறிய (சுங) நாயன்மார்களில் "ஸ்ரீ சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளும் சேரமான் பெருமா ணுயனுரும் தாமெடுத்த மானுட தனுவோடு திருக்கைலையை அடைந்தார்" என்று சொல்வதனை யாவரு மங்கீகரிப்பதுபோல, "ஸ்ரீ சங்காராசா ரிய ஸ்வாமிகளுங் கைலயங்கிரியை அடைந்தார்" என் றங்கீகரிக்கவேண்டும்; "அவ்விதம் அங்கீகரித்தல் கூடாது" என்னும்பக்ஷத்தில், "ஸ்ரீ சுந்தரமூர்த்திஸ்வாமிகள் முதலிய வர்கள் கைலாயத்திற்குப்போனுர்கள்" என்பதை அங்கீகரித் தல் கூடாது. அங்ஙனம் அங்கீகாரம் பண்ணுவிடத்துப் பின்னுள்ளோர்களும் பல சங்கை செய்வார்கள். "செய்தா லென்ன?" எனின், "வேதமுதலிய சாஸ்திரங்க ளனைத்தும் பொய்" எனப்படும்; "அவைகள் பொய்யானுல் வேதாகமங் களைக் கூறிய கடவுளும், அறமுதலிய நான்கு புருஷார்த் தங்களும் இல்லையெனப் புகலவேண்டும்; அவ்வாறு சொன் ஞல் நாமும் நமக்குக் காணப்படுவதாகிய வுலகமு மில்லை" எனச் சொல்லவேண்டும்; தினந்தோறும் நாம் உலக

சுகத்தை அநுபவித்துக்கொண் டிருத்தலின் நமக்குக் காரணமாகிய பகவானையும் கடவுளை யறிந்த பெரியோர்கள் திருவாய்மலர்ந்தருளிய சத்திய வாக்கியங்களையுஞ் சிரசால் வகித்து அங்கீகரிக்கவேண்டும். இவ்விதமான யுக்தியை ஒத்துக்கொள்ளாவிட்டால் அநேக ஜன்மங்களோறும் கடவுளைப் பிரார்த்தனை செய்து கிடைத்த அரிதாகிய மானுடப் பிறவி இனி வாராதாகலின் அவஸ்யம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்க.

பின்னும், "ஆகாசமானது எங்கும் வியாபித்திருந்தும் அதின் உண்மை கண்ணுக்குக் காணப்படாததுபோல, கடவுள் எங்கும் பரிபூரணராக நிறைந்திருந்தும் அவரது பெருமை ஜீவர்களுடைய மனமுதலிய கரணங்களுக்குத் தோன்றவில்லை; கடவுளுக்குச் சரீரம் இருந்தாலன்றோ "மனமுதலிய கரணங்களுடையவர்" எனவும், "அவைகளாலறியப்படுகிற விஷயங்களுள்ளவர்" எனவும், "அவரது பெருமையை அவர் அறிவார்" எனவுங் கூறலாம். அவைகளில்லாமையின் "அசரீரியாயும், மனமுதலிய கரணங்களுக்கு எட்டாதவராயும், நிரிந்திரியராயும் விளங்குகிறார்" என்று வேதாகம முதலியவைகள் முறையிடுகின்றன. ஆதலின்,

"தன்பெருமை தனையறியாத் தன்மையன்" எனவும்,

"கரணங்களெல்லாங் கடந்து நின்ற கறைமிடற்றன்" எனவும்

ஸ்ரீ மாணிக்கவாசக ஸ்வாமிகள் திருவாய்மலர்ந்தருளினர்.

அத்தன்மை யுடைத்தான சத்திய ஞானானந்தப் பொருளைப் பரிசுத்த அந்தக்கரணத்தினால் உள்ளும் புறம்பு

மொருபடித்தாகத் தரிசித்துப் பகவானது பெருமையை நமக்குத் தெரிவிப்பவர்களும் சர்வதந்திர ஸ்வதந்திரர்களுமாகிய பெரியோர்கள் நமரங்களுய்யும்பொருட்டு இம் மர்த்திய லோகத்தி லவதரித்து, மாதா பிதாக்கள் தமது புத்திரர்களுடைய வயதுக்குத் தகுந்த புசிப்பைக் கொடுத்துத் தேகத்தை எப்படி வளர்ப்பார்களோ அது போன்று, மந்தன் முதலிய நமது பக்குவங்களுக்குத் தகுந்த விவேகத்தைப் போதித்து, உயிர் என்னும் அறிவை வளர்ப்பார்கள், அல்லது ஞானானுபவ ப்ரத்யக்ஷத்தை உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெரிவிப்பார்கள்.

176948

எப்படியெனின், “தேகதாரிகளாயிருக்கின்ற நாம் வாசம் பண்ணுவதற்கு வீடுகளிருப்பனபோல, ப்ரஹ்மா முதலியவர்கள் வாசம் பண்ணுவதற்குக் கைலாய முதலாகிய அண்டங்களிருக்கின்றன” எனவும், “நமக்குப் பெண்டு பிள்ளைகளிருக்குமாறுபோலப் பகவானுக்குத் தார புத்திராதிகளுண்டு” எனவும், “நமது குடும்ப சம்ரக்ஷணை நிமித்தம் பூமியில் நாம் சஞ்சரிப்பதுபோலச் சிவபெருமான் ஜீவர்களைக் காப்பாற்றும்பொருட்டு சஞ்சரித்தார்” எனவும், “தமதன்பர்கள் நிமித்தம் தமது லீலாவிபூதியினாலனேக அவதாரங்கள் எடுத்தார்” எனவும், “நித்திய விபூதியினால் ஆசாரியமூர்த்தியாக எழுந்தருளிச் சனகர் முதலிய அனேகம் பெரியோர்களுக்கு ஞானோபதேசஞ் செய்தார்” எனவும், பதினெண் புராண முதலியவைகளிற் கூறப்பட்டுள்ளனவாகிய கதைகளைப் பொதுவாக முதலிற் சொல்லி, அவைகளை அங்கீகரித்த பின்னர் பூர்வார்த்தம், உத்தரார்த்தத்தின் விபரத்தையும், பாஹ்ய பக்தி, அனன்ய பக்தி, எகாந்த பக்தி என்னு மூவித நிலைமைகளையும் போதிப்பார்கள.

பூர்வார்த்தமாவது, கல்யாணப்பிள்ளை காசியாத்திரை போன கதை சொல்லுவதுபோல, ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்று மில்லாதவனாக விளங்காநின்ற கடவுள் இருவினையொப்பு மலபரிபாக மமைந்த அன்பர்கள் நிமித்தம் ஒருருவமெடுத்துப் பல விதங்களான திருவிளையாடல்களைச் செய்தார் எனக் கூறுதல்.

உத்தரார்த்தமாவது, அக் கதைகளினுடைய சாராம்ஸத்தை யெடுத்துக் காட்டுதல்; அஃதாவது, "திரிபுராதிகளைப் பரமசிவன் சிரித்தெரித்தார்" எனக் கூறுதல். சிரிப்பாவது ஞானப்ரகாசம். சூரியப்பிரகாசத்தில் இருள் நாசமானதுபோல, ஞானசூரியப்பிரகாசத்தில், அல்லது துரிய வெளிச்சத்தில் ஸ்தூல சூட்சும காரண மென்னும் பெரிய மாயாவிருளானது நாசமாயிற்று. இவ்விதமாகிய இருளைத் தேகேந்திரியபிரபஞ்ச முதலானவைகளாகவும், புத்திரமித்திர களத்திர முதலானவைகளாகவும், இவைகள் நெடுங் காலஞ் சத்தியமபோ விருப்பனவாகவும் கூறுதல். மாயையினுடைய புத்திரர்களாகிய காமன் முதலிய கூ-பெயர்களும் சகலமான வுயிர்களையும் அநேக காலமாகப் பெரிய மயக் கஞ்செய்விக்கின்றார்கள். அன்றியும், "பரமசிவனோடு யுத் தஞ்செய்த திரிபுராதிகள் ஓர் காலத்து நாசமடைந்தார்கள்" என்று கூறப்பட்டிருக்கின்றது. மேற் கூறிய கூ-பெயர்களன்றி இன்னும் அனேகர் உயிரோடிருந்து ஜீவர்களோடு நெடுங்காலமாகப் பல பிறவிகளிலும் ஜாக்கிர முதலிய அவஸ்தைகளிலும் விடாது யுத்தஞ் செய்கின்றார்கள். 'இவர்களை யார் ஜயிப்பார்கள்?' எனின், ஸ்தூல முதலிய மூன்று தேகங்களுக்குக்குரிய காரண காரியங்களை ஒன்றிலொன்று உண்டானபடியே யடக்கி அவைகளுக்குக் காரணமாகிய துரிய மென்னுங் கைலாயத்தை அல்லது பரமசிவ னுருவ

த்தை எவர்கள் தரிசித்தார்களோ, அவர்களே விரோதிகளைக் கொன்றவர்க ளென்க. ஆயின், "அப்பர் சுவாமிகள் கைலையைப் பார்க்கவேண்டு மெனத் தேடிச் சென்றார் எனக் கூறியிருக்கிறதே" எனின், ஆகாயத்தின்கணுள்ள அண்டகோடிகளில் கைலாய மென்னும் அண்டம் தேஜோமயமாக விளங்கிக்கொண்டிருக்கிறது; அதனை மானிடர்கள் பார்க்க முடியாது; தனது தேகத்தின்கண் சிரசென்னுங் கைலையில் ஞானவடிவமாகப் பிரகாசித்துக்கொண்டிருக்கின்ற கடவுளைப் பார்க்கக் கூடுமாதலின், இதனை அப்பர் சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய திருநெறித் தமிழ் வேதமாகிய

"விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோனட் டுணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே."

என்னுங் கவியா லுணர்க.

அன்றியும், ஸ்ரீ சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் கைலாயத்திலிருந்து இப் பரதகண்டத்தி லவதரித்தமையால் மீண்டும் சேரமான்பெருமா ளாயனாரை அழைத்துக்கொண்டு கைலாயத்திற்குப் போனதுபோல, "ஸங்கரஸ்ஸங்கரஸ்ஸாக்ஷாத்" என்னும் வாக்கியப்படி சாக்ஷாத் பரமேஸ்வர னுடைய அம்ஸமாக அவதாரஞ் செய்த ஸ்ரீ ஸங்கராசாரிய ஸ்வாமிகள் மீண்டும் அச் சங்கர னுடைய நிவாச ஸ்தானமாகிய திருக்கைலைக்குப் போனா ரென்பது பூர்வார்த்தம்.

"கல்லாலின் புடையமர்ந்து நான்மறை யாறங்கமுதற்
கற்ற கேள்வி
வல்லார்க ணால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய்
மறைக்கப் பாலாய்

எல்லாமா யல்லவுமா யிருந்ததனை யிருக்தபடி
யிருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாம னினைந்துபவத்
தொடக்கை வெல்வாம்.'' எனவும்,

"எங்குஞ் சிவமொழிய வில்லையவன் றன்னுணை'' எனவும்,

"பார்த்த விடமெல்லாம் பரமன்கா ணம்மானை
பாராம லென்னளும் பாழ்பட்டே னம்மானை'' எனவும்

கூறிய பாசுரங்களின் அர்த்தத்தை நன்று யாராய்ந்துணர்த லெதுவோ அது உத்தரார்த்தமாம். இவ்விதமான உத்த ரார்த்தத்தைப் பரிசோதித்துத் தன்னை யறிந்தவர்கள் கைலையங்கிரி வேறென்றும், கடவுள் வேறென்றும் மயங்கா ரென்பது சத்தியம்.

பாஹ்ய பக்தி முதலிய மூன்றின் விபரங்களாவன: அவற்றுள், எங்கும் பரிபூரணமாக நிறைந்துள்ள கடவுளி னுடைய அனந்தாவதாரங்களில் சிவாவதாரம், விஷ்ணு அவதாரமுதலிய வடிவங்களைச் சிற்ப சாஸ்திரங்களிற் கூறிய லக்ஷணத்தின்படி கல்லினாலாகிலும், செம்பினாலாகி லும், வெள்ளியினாலாகிலும், மரத்தினாலாகிலும், சித்திர வேலையாகிய படத்திலாகிலும் செய்வித்து; ஆலயத்திலா வது, மடத்திலாவது, தன் வீட்டிலாவது வைத்து, அதனைச் சாக்ஷாத் சிவஸ்வரூபமாகப் பாவித்து, அர்க்கிய பாத்திய முதலிய சோடசோபசாரங்களாற் பூஜித்துத் தனக்கு வேண் டிய கோரிக்கைகளை அநுக்கிரகஞ் செய்யவேண்டுமெனத் திரிகாண சுத்தியாகவும், ஸ்ரவண முதலிய ஒன்பது விதங்களால் பகவானைத் தனக்கு வேறாகவும் கருதி ஆரா திப்பது யாதோ அது பாஹ்ய பக்தியாம்.

இப் பக்தியின் விரிவுகளாவன:—

கடவுளுடைய அனந்தாவதார கதைகளைக் காதினாற் கேட்டல் ஸ்ரவணம்.

சரிகமபதனிச முதலிய ஸ்வரங்களைக் கூறுகின்ற இசைத்தமிழ் என்னும் பரதசாஸ்திர லக்ஷணந் தெரிந்து, வாக்கினால் கீர்த்தனைகளைப் பாடித் துதித்தல் கீர்த்தனம்.

அந்தப் பகவானைப் பரிசுத்தமான மனதினால் நினைத்தல் ஸ்மரணம்.

பெண்டு பிள்ளைகளைக் காப்பாற்றுவதற்கு விரும்பி ஒருவனிடத்திற் போய்ச் சேவகத் தொழில் செய்வது போல, தன்னைக் காப்பாற்றுவதற்கு மிகவும் விருப்பமுற்றுச் சிவபெருமானது திருவடிக் கமலங்களிற் சேவிப்பதியாதோ, அது பாதசேவனம்.

ஸஹஸ்ர நாமம் அஷ்டோத்தர ஶதநாமங்க ளென்பவைகளால் கடவுளுடைய திருவடிகளை யர்ச்சித்தல் அர்ச்சனம்.

இரண்டு கால், இரு கை, இரண்டு தோள், நெற்றி மார்பு என்னும் எண்வகை யுறுப்புக்களும் பூமியிற்பட நமஸ்காரஞ் செய்தல் வந்தனம்.

தன்னை ஆண்டுகொள்ளத்தக்க பகவானுக்குத் தான் அடிமைத்தனமா யிருத்தல் தாஸ்யம்.

தன்னாற் கூடிய சக்திபானுசாரங் கடவுளினிடத்து மிகுந்த அன்பு வைத்தல் சக்கியம்.

தேகேந்திரிய பிரபஞ்ச முதலியவைகளை அபிமானித்திருக்கின்ற ஜீவனுடைய மனமுதலிய பல கற்பனைகளை

யகற்றி அவ்வித ஜீவனைக் கடவுளுக்கு அற்பணமாக, அல்லது காணிக்கையாகச் செய்தல் ஆத்ம நிவேதனம்.

இத்தன்மையாகிய பாஹ்ய பக்தியைப் பூர்வ ஜனனங்களிலும் இப் பிறவியிலும் விடாது செய்த சத்கர்ம புண்ணிய பரிபாக விசேஷமுள்ளவர்களுக்குச் சுலபமாக மனமுதலிய அகக்காரணங்களும், சப்தமுதலிய புறக்காரணங்களு மடங்கிப் பகவானது யதார்த்த நிலைமை ப்ரத்யக்ஷமாகத் தரிசனங் கிடைக்கு மாதலின்,

"பக்தி வலையிற் படுவோன் காண்க"

என்று ஸ்ரீ மாணிக்கவாசக ஸ்வாமிகள் திருவாய்மலர்ந்தருளினர்.

அனன்ய பக்தியாவது, சத்தியலோகமுதல் பூலோகங் கீழாயும், பூலோகமுதல் பாதாள மீறாயுமுள்ள பதினான்கு உலகங்களல்லது, அனேக அண்டங்க ளெல்லாம் ஒருருவமாகவும், காற்று மூச்சாகவும், பத்துத் திசைகள் காதுகளாகவும், சூரிய சந்திராதிகள் நேத்திரங்களாகவும் அமைந்துள்ள விராட் புருஷனையன்றி யன்னிய மில்லாமையால் சராசரமுதலாகிய சகல வஸ்துக்களும் அவரது ஸ்வரூபமே யென்று அகண்டமாகப் பாவித்து, மனதினால் ஷோடசோபசாரங்களைச் செய்து தியானித்தல்.

ஏகாந்த பக்தியாவது, ப்ரஹ்மா முதல் எறும்பு முடிவாயுள்ளனவாகிய சகல வஸ்துக்களுங் கடவுளைத் தவிர இல்லை எனவும், இவ் விகார வடிவங்க ளவருடைய ரூபமல்ல எனவும், சர்வேஸ்வரனை யன்றித் தானில்லை எனவும், தானே பகவத் ஸ்வரூபம் எனவும், பகவா னுடைய திவ்ய ஞானப்பிரகாசத்தில் தன்னையும், தனது ப்ரத்யகாத்மப் பிரகாசத்தில்

பகவானையுந் தியானித்துணர்ந்து, பேதாபேதங்க ளனைத்து மிறந்து, அன்னியமின்றித் தானே தானாக விளங்குந் தன்மையை யுடையது எதுவோ, அது ஏகாந்த பக்தி. "இவ்விதமாகிய ஏகாந்த பக்தியி னிலைமையே வேதாந்த முடிபு" என்றுபெரியோர்கள் சொல்வார்கள். இதனைச் சில வேதாந்திகள் ஆக்ஷேபனை செய்வார்களாயின் விடை கூறுவதிற் பயனில்லை யென்றஞ்சி விடுத்தனம்.

இங்ஙனமிருக்க, ஆதிசங்கராசாரிய ஸ்வாமிகள் சைவ முதலாகிய சகல சமயத்தவர்களுக்கும் பொதுவாக ஸ்தாபித்துள்ள அத்வைத சித்தாந்தத்தை மிகவுஞ் சூக்குமபுத்தியுடைத்தான இங்கிலீஷ்காரரும் ஜர்மன் தேசத்தார் முதலியவர்களும் பரிசோதித்து, "இந்துமத சித்தாந்தமே சிறந்தது" என்று அகிகாரஞ் செய்தனர். அவ்வாறு புறமதத்தவ ரனைவரும் அங்கீகரித்த அத்வைதத்தில் "பரம்பொருளொன்றே எல்லாமா யல்லவுமா யிருக்கின்றது" எனக் கூறி யிருப்பதனால் அந்த "அத்வைதத்திற்கு ப்ரஹ்ம வாதம் எனப் பெயர்" என்று அநாதியான வேதங்களும் உபநிடதங்களு முறையிடுகின்றன. அவ்விதமான அத்வைதத்தை "மாயாவாதம்" எனத் துவைதிகளும், விசிஷ்டாத்வைதிகளும் கூறுகின்றார்கள். அதற்குச் சமாதான மெழுதப்புகின் அபாரமாக விரியுமாதலின், சிறிய பூதகண்ணாடியிற் பெரிய பட்டணத்தைக் காட்டுவதுபோல, சிறிய யுக்தியினால் பெரிய அர்த்தத்தைத் தெரிவிக்கின்றனம். அஃதாவது,

கண்ணுக்குக் காணப்படுகிற புறவிருளும் சூரியனது பிரகாசமாகிய புறவெளிச்சமு மிருப்பனபோல, கருத்துக்குத் தோன்றுகிற அகவிருளும் ஞானசூரியப் பிரகாசமாகிய

அகவொளியு மிருக்கின்றன. அவற்றுள், அகவிருளை மாயா சக்தி என்றும், அகவொளியைச் சிற்சக்தியென்றும், மாயா சக்தியினு லுயிர்களுக்குப் பிறவியும், சிற்சக்தியினால் மோக்ஷமுங் கிடைக்கு மெனவும், பந்த மோக்ஷ மிரண்டும் உயிர்களுக்கே யன்றிக் கரணங்களுக்கு எட்டாது விளங்குங் கடவுளுக்கு இல்லை எனவும், உயிர்கள் வழிபடும்பொருட்டுக் கடவுள் ஒருவர் உண்டெனவும், அக் கடவுளை யடைவ தற்குக் காரணமாயுள்ள சரியை முதலாகிய சாதனங்களைச் செய்தவர்கள் சாலோக முதலிய பிரயோஜனங்களை யடை வார்களெனவும், அநாதியான வேதாகம முதலியவைகளிற் கூறப்பட்டுள்ள சாலோக முதலாகிய நான்கு பிரயோஜ னங்களில் ஸ்ரீ சங்கராசாரியர் முதலாகிய பூர்வாசாரியர்கள் அவரவர்களுக்கு வேண்டிய மதத்தை வாதித்துச் சித்தாந் தஞ் செய்தார்களெனவுந் தாத்பரியமாகின்றது. ஆகவே, பசுக்கள் பலவித வர்ணங்களா யிருந்தாலும் அவைகளின் சாரமாயும் மதுரமாயு மிருக்கின்ற பாலொன்றுதல்போல, மத சித்தாந்தங்கள் பலவிதமா யிருந்தாலும் அச் சித்தாந் தங்களின் சாரமாயுள்ள கடவு ளொருவனே யென்பது சத்திய மெனப் பெற்றும்.

அன்றியும், சுழுப்தியில் தானுக இருந்தமையா லுயிர் களுக்குத் துக்க மில்லை; தனக்கு அந்நியமாகிய உலகந் தோற்றியவுடனே பலவித துன்பங்களுக் கிடமாகிப் பல பிறவிகள் விளைகின்றன. ஆதலின், பல கற்பனைகளை யகற்றி ஒருபொருளாக இருக்கவேண்டுமெனவும்,

"சத்தியம் ஞ்ஞான மநந்தம் ப்ரஹ்மா"

எனவுங் கூறிய உபநிஷத்வாக்கியத்தின்படி ஸ்ரீஸங்கரர் சித் தாந்தஞ் செய்தனர். இந்தப் பிரகாரம் ஏனைய மதாசாரியர்

கள் அவரவர்களுடைய கல்வி சாதுர்யத்தினால், "ஒன்றெனக் கூறப்படாது, இரண்டு பொருளே சத்தியம்" எனவும், "மூன்று பதார்த்தங்களே சத்தியம்" எனவும், அத்வைதம்-விசிஷ்டாத்வைதம்-த்வைதம் என்று சொல்லப்படுகிற திரி மத சித்தாந்தங்க ளுலகத்தில் விரிந்தன.

இவைக ளன்றியும், அவரவர்களுக் கிசைந்தவாறு தங்கள் மதமே சிறந்ததெனச் சிந்தாந்தஞ் செய்கின்றார்க ளாதலின், "சமய கோடிகள்" எனத் தாயுமானசுவாமிகள் கூறினர். இன்னும் அனந்தங்கோடி சித்தாந்தங்கள் கூறினும் அவைகளை யெல்லாம் நன்கு யாலோசிக்குமிடத்து ஒன்றைப் பெருக்கினால் அந்த ஒன்றிலிருந்து அனேகங்கள் விரிகின்றன; அவ்வாறு விரிந்தவைகளைச் சுருக்கியவிடத்து, ஒன்றே மிச்சமாயிருத்தலின், 'ஒன்றையன்றிப் பல இல்லை' என்பனபோல, ஒரு பொருளாக விளங்கும் பகவத் ஸ்வரூபமாகிய அறிவே பலவித ஜீவர்களாகவும், மனமுதலிய கரணங்களாகவும் புறம்பில் காணப்படுகின்றன. அவ்வாறு தோன்றுபவைகளைத் தனது விகாரமென் றுணராமல் பல விதங்களாகப் பேதப்படுத்தினா லவைகளுக்குக் காரணமாயும் எதார்த்தமாயும் விளங்காநின்ற ஓரறிவிலிருந்து அநேக மதங்கள் விரிகின்றன. அப்படி விரிந்த மதங்களினுடைய ஆதியந்தத்தைக் குரு முன்னிலையாகவாவது, சாஸ்திர மூலமாகவாவது தனது சூக்கும புத்தியினால் விசாரணை செய்தவிடத்து ஒரு பொருளென்னுந் தனது எதார்த்த வடிவமே சேடித்திருப்பதனா லவ்வொரு பொருளையன்றிப் பல மதங்களு மில்லையென்பது நிச்சயம்.

அன்றியும், அகம்புறம் இன்றி எங்கும் வியாபகமாய் நிறைந்துள்ள பூதாகாசத்தினின்றும் பலவாக விரிந்த சராசரப்பொருள்க ளனைத்தும் அவ் வாகாச வியாபகத்தி லட

க்குவனவேயன்றி வேறிட மில்லை; இதுபோலச் சிதாகாச சிற்பரஞ் சுடரினின்றும் கற்பனையாக விரிந்த ஞானுக்ஞான வேறுபாடுக ளனைத்தும் அச் சிதாகாசத்தின்கண் அடங்கி அச் சிதாகாச வடிவமாகவே பிரகாசித்துக்கொண் டிருக்கின்றது என ஸ்ரீ ஶங்கராசாரிய ஸ்வாமிகள் ஞானதிருஷ்டியினு லறிந்து கூறினர்.

பின்னும், "பஞ்சபூத பௌதிகமாகிய சகல சராசர வுயிர்க ளெல்லாம் ஆகாச வியாபகத்தில் வசித்திருக்கின்றூர்க ளாதலின் அவ் வாகாசத்தை இல்லையென வாதித்துப் பூர்வபக்ஷம் பண்ணக்கூடாததுபோல, ஓரறிவு முதல் ஆறறிவு முடிவாயுள்ள ஜீவர்க ளனைவரும் ஞானவடிவத்தில், அல்லது வியாபகத்தில், வாசம்பண்ணிக்கொண் டிருக்கின்றூர்க ளாதலால் அந்த ஞானத்தை இல்லையென்று தர்க்கித்துப் பூர்வபக்ஷம் பண்ண முடியாது.

அங்ஙனமாயின், ஆகாசங் கண்ணிற்குத் தோன்றுகிறதுபோல ஞானந் தோன்றவில்லை; அன்றியும், ஆகாசஞ் சூனியமாக இருப்பதனுல் அதனைப் பூர்வபக்ஷம் பண்ணக் கூடும்" எனின், ஆகாசம் பிருதிவிமுதலிய நான்கு பூதங்களுந் தோன்றி விளங்கி மறைவதற்குக் காரணமாயும் சர்வத்துக்கும் வியாபகமாயு மிருத்தலின் அதனைத் தள்ளி ஓர் பொருளைத் தெரிவிக்க வேண்டும். "அப்படிக் கூடாது" எனச் சொல்லுமிடத்து, ஆகாச முண்டென் றங்கீகரிக்க வேண்டுவதுபோல, ஞானமும் உண்டென் றங்கீகரிக்க வேண்டுமென்க.

"ஆகாசஞ் சூனியமாயினும் பார்ப்பவர்களுடைய கண்களுக்குக் கூடாரம் போட்டது போலக் காணப்படுகிறதன்றோ? அதுபோல, ஞானம் கண்ணுக்குத் தோன்ற

வில்லை'' எனின், ஆகாசமுதலிய பஞ்சபூதங்களில் பிருதிவி அப்பு விரண்டும் கண்ணுக்குக் காணப்படுவதால் ரூபம்; நெருப்பு, நேத்திரத்திற்குத் தோன்றி மறைதலும், வாயு ஸ்பரிச வுணர்ச்சியாலறியப்பட்டு மறைதலுமா யிருத்தலின் அவ்விரண்டும் ரூபாரூபம். ஆகாசம், தன்னையும் அன்னிய த்தையும் அறியாமையால் ஜடம். அங்ஙனம் ஜடவடிவமான ஆகாசத்தைச் சித்துவடிவான ஜீவன் தனது மனதினால், அல்லது அறிவினாற் பிரித்து அறிகின்றான்; அஃதெப்படி யெனின், தேகேந்திரியப் பிரபஞ்ச முதலியவைகள் சப்த முதலிய ஞானேந்திரியங்களுக்கும், வாக்குமுதலிய கர்மேந் திரியங்களுக்கும், மனமுதலிய அந்தக்கரணங்களுக்குங் காணப்படுவன வாயினும், ஓர் இந்திரியத்தினது தொழிலை வேறு ஓர் இந்திரியம் செய்யாமையால் சகலேந்திரிய பிராண அந்தக்கரணங்க ளெல்லாவற்றையுஞ் சாக்ஷியாக நின்று தனது பிரத்யகான்மாவென்னும் ஞானத்தினால் நேத்ரம், கண்டம், ஹ்ருதயம், நாபி, மூலாதார மெனப்படுகிற ஐந் திடங்களில் ஜாக்ரம், ஸ்வப்னம், சுழுப்தி, துரியம், துரியா தீதமென்னுங் கீழாலவஸ்தைகளைத் தினந்தோறும் ஜீவன் சகல மானுடர்களிடத்திலும் பொதுவாகநின் றறிந்துகொ ண்டிருக்கின்றான். அவ்வித ஜீவன் ஒருவனாயிருந்தும் தேக போக கர்மாபிமானங்கள் பலவிதங்களா யிருப்பனபற்றி, வெவ்வேறாகக் காணப்படுகின்றான். அவ்வாறு பகிர்முகத் தில் காணப்பட்டாலும் அந்தர்முகமாக விசாரித்துணர்ந் தவர்கள் ''அபேதமான ஞானம் ஒன்றே'' எனத் துணிவ ராதலானும், அங்ஙனம் விசாரித்தவர்களும் விசாரணை யில் லாதவர்களுமாகிய யாவரும், மேற்கூறிய ஜாக்ரமுதலாகிய ஐந்தவஸ்தைகளைப் பிரதிதினமு மனுபவித்துக்கொண்டிருக் கின்றார்க ளாகையாலும், அத்வைத சித்தாந்தத்தைப் பூர்வ பக்ஷம் பண்ணக்கூடாமையாலும் இதற்கு ''மாயாவாதம்'

எனப் பண்டிதர்கள் கூறுகின்றனர்கள். இதனால் சகல சமயத் தவர்கள் அங்கீகரிக்கத் தக்கதும், மூன்று காலத்து மொரு தன்மைத்தாக விளங்குவது மெதுவோ, அது அத்வைதம் என வெளிப்படையாகத் தோன்றுகிறது; இதனை விரிக்கிற் பெருகு மாதலின் சுருக்கமாகத் தெரிவித்தனம்.

இதுநிற்க, இந்திரபீடங் கரபாத்திர ஸ்வாமிகளெனச் சொல்லுகின்றனராகையால் அதன் விபரமாவது:-இந்திரம்-ஸ்ரேஷ்டம், பீடம்-ஆசனம், எனவே, மேலாய சிம்மாசன மென்றாயிற்று. எதற்கு மேலாயதெனின், கர்மம், பக்தி, யோகமென்னு மூன்றிற்கு மேலாகியது ஞானமாதலானும், அந்த ஞானத்தில் அஞ்ஞானமாயும் அனேக சித்திர விசித் திரங்களாயுமுள்ள தேகேந்திரிய பிரபஞ்ச முதலியவை கள் தோன்றி விளங்கி மறைகின்றன ஆகலானும், அஞ் ஞானமாகிய தேகேந்திரிய ப்ரபஞ்ச முதலியவைகள் ஜட மாகவும் பிரத்யகான்மாவுக்கு வேறாகவுந் தோற்றிக்கொ ண்டு ஜீவனைச் சதாகாலமுந் துன்பப்படுத்திக்கொண்டிருப் பதனாலும், உதயாஸ்தமன மின்றி யெப்பொழுதும் ஞான ஸ்வரூபமாகப் பிரகாசித்துக்கொண்டுள்ள தனது யதா ர்த்த வடிவத்தில் தேகாதிப் பிரபஞ்ச முதலானவைகளை யடக்கி, அன்னிய மின்றித் தானே தானா யமைதி பெற் றிருப்ப தெதுவோ அது இந்திரபீடம், அல்லது ஞானபீடம், அத்வைதபீடம் எனப் பொருள் கொள்ளவேண்டும். வேறு விதமாகக் கூறின் முரணும். ஏனெனின், அத்வைதபீட த்தை நிர்த்தாரணஞ் செய்த ஆதிசங்கராசாரிய ஸ்வாமிகள் ''ப்ரக்ஞானம் ப்ரஹ்ம'' ''அஹம் ப்ரஹ்மாஸ்மி,'' ''தத்வ மஸி'', ''அயமாத்மா ப்ரஹ்ம'' என்னும் நான்கு மகா வாக்கி யங்களைத் தோடகாசாரியர் முதலாகிய நான்கு மாணாக்கர்க ளுக்கும் போதித்துக் கிழக்கு முதலிய நான்கு திசைகளி

விருந்து நான்கு வருணங்களினது குல தர்மங்களை வழாது காக்கும்வண்ணம் உத்திரவு செய்தனர். அவ் வுத்திரவுப் பிரகாரம் நான்கு திக்குகளிலிருந்து அவரவர்களுடைய கிருத்தியத்தைச் செய்கின்றார்கள். அவர்களில் தென் திசைக் கதிபராகிய ஸ்ருங்கேரி பீடத்தவர்களுக்குச் சரஸ்வதி பீடமெனவும், அல்லது வித்யாபீட மெனவும் பெயர் சொல்லுவர். ஏனைய மூன்று பீடங்களுக்கும் சங்கார் பீடம், அல்லது அத்வைதபீட மென்று பெயர் சொல்ல வேண்டுமேயன்றி இந்திரபீடம் நான்கென்பதற்கு வேறு விதமாகப் பொருள் கூறப்படாதென்க. இங்ஙனமிருக்க, ஸ்ருங்கேரி சங்கராசாரிய ஸ்வாமிகளுக்கும், கும்பகோணம் சங்கராசாரிய ஸ்வாமிகளுக்கும் சில கக்ஷி பேதங்க ளுண்டாகி விவாதமிருப்பதாலதனை யெழுதப்புகின் விரியுமெனக் கருதி விடுத்தனம்.

அன்றியும், சிஷ்யர்களுக்குத் தோன்றுகிற பலவித சங்கைகளைக் கெடுப்பவராயும், ப்ரஹ்மானந்த சுகத்தைக் கொடுப்பவராயும் விளங்காநின்ற ஆதி சங்கராசாரியருக்கு ஜகத்குரு சங்கராசாரியர் எனப் பெயர் வந்தது. அத்தன்மைச் சிறப்புற்ற ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளுடைய அத்வைத பீடத்திற்கு அதிகாரியாகிய ஸ்வாமிகள் ஸ்வயம் பிரகாசப் பொருளாகிய ஸ்வரூப சாக்ஷாத்காரத்தை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தரிசித்தவரும், ப்ராஹ்மணுள் முதலிய நான்கு வருணத்தவர்களுக்கும் தமது ஸ்வானுபவ வுண்மையைத் தெரிவித்தவரும், கரமே பாத்திரமாகப் பிக்ஷை யேற்றுப் புசித்து வர்ணாஸ்ரம பேதமின்றிச் சஞ்சரித்தவருமாகிய மகானுபாவருக்குக் கரபாத்திர யோகீஸ்வரர் எனப் பிரசித்தி நாமம் வந்தது; இவரது சரித்திர வரலாறு தெரியாமையா லெழுதவில்லை. இந்தக்

கரபாத்திர யோகீஸ்வாருடைய] மாணுக்கர் தேத்தாத்திரய ஸ்வாமிக ளாதலின்

"நிலவுகோப் பளிக்கு மிந்திர பீட நிலமா பாய்வரு முரியன்
நேயனுங் கரபாத் திரனெழிற் றெத்தாத் திரயன்"

எனக் குருபூசை ஸ்தோத்ரத்திற் கூறப்பட் டிருக்கின் றது. இங்ஙனங் கூறிய தெத்தாத்திரய ஸ்வாமிக ளியற் றிய உபதேச வாக்கியம் முமூட்சுக்களுக்கு மிகவு முப யோகமா யிருக்கு மெனக் கருதி, ஸ்ரீமத் கரபாத்திர யோகீஸ்வர ரியற்றிய நூலிற் சேர்த்திருக்கின்றனம். இது நிற்க,

சர்வஜீவ தயாபரராயும், சர்வவியாபகராயும், அக ண்ட தேஜோமய வடிவராயும் விளங்காநின்ற ஸ்ரீ சிவ பெருமானர்: தேவர்களுக்குத் தேவனுகவும், மானுடர்க ளுக்கு மானுடனுகவும் ரூபமெடுத்துத் தத்துவஞானத் தைப் போதித்து, நிரதிசயானந்த சுகத்தைக் கொடுப்பவ ராதலின் ஸ்ரீ சங்கராசாரிய ரெனவும், ஜகத்குரு எனவும் சகலமானவர்களுங் கூறுகின்றூர்கள். இத்தகைய சிறப்பு வாய்ந்த லோகோபகார தயாபர மூர்த்தியாகிய ஸ்ரீ சத் குருநாதனைப் பண்டித பாமராள் முதலிய யாவருந் திரி கரண சுத்தியாகப் பூஜிப்பார்க ளென்பது நிச்சயம். ஏனெ னில், மனோவாக்குகளுக்கு எட்டாத மஹாதேவர்: சராசர முதலிய அனைத்துந் தனது வடிவமாயினும் உயிர்களெல் லாந் தன்னை யன்னியமாக நினைத்து மயங்குகின்றூர்க ளாத லானும், அவ் வுயிர்க ளனைவருந் தன்னை யுபாசிக்குமாறு கருதித் தானே விராட் புருஷனுகவும் அனந்த மூர்த்திக ளாகவும், அறிவுக்கு அறிவாகவும், அருட் குருவாகவு மிருந்து எல்லா உயிர்களையும் பரிபாலனம் பண்ணுநின்று ராதலானும்,

"அருவாகி யகண்டமுமாகி ஆனந்தமு மாகிய பிரமங்
குருவா யருள்செய்தமை பாரீர்
கோதின்றி நிறைந்தமை பாரீர்." எனவும்,

"சேறிவாகி யிருந்தவர்தாமே சீவன் சிவனென்ன
விரண்டாய்ப் பிறியாவகை நின்றமை பாரீர்." எனவும்,

"தந்தைதா யாவானுஞ் சார்சதியிங் காவானும்
அந்தமிலா வின்பமக் காவானு—மெந்தனுயிர்
தானாகு வானுஞ் சரணாகு வானுமருட்
கோனாகு வானுங் குரு." எனவும்

பெரியோர்கள் திருவாய் மலர்ந்தருளின ராதலானும், "யாவுங் குருவடிவம்" என்பது சத்தியம்! சத்தியம்! இவ்வாறு அநாதியான வேதாகம முதலிய பிரமாண வாக்கியங்கள் அனேகமிருக்க இவற்றிற்கு விரோதமாக, "அறிவறியாமை யாதார விளக்கம்" எனப் பெயருள்ள அத்வைத கிரந்தத்தில் "உன்னாற் குறித்திருந்த" என்னும் வெண்பாவில்,

"பின்னொருவர் சங்கரரைத் தூஷித்துச் சார்ந்தா ரயல்மரபில்"

எனக் கூறப்பட் டிருக்கின்றது. அதற்குச் சமாதான மொழுதப் புகின் விரியுமெனக் கருதி ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளியற்றிய சதாசாரப் பிரகரண வுரையிற் கூறினும். ஏனெனின், இஃது ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்ய ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளது சரித்திரச் சுருக்கமாதலின் இதில் அசங்கதப் பிரசங்கங் கூறக்கூடா தாதலி னென்க.

ஸ்ரீ ஜகத்குரு பரம்பரை

முற்றுப்பெற்றது.

176948



ஸ்ரீ விவேகாநந்த விஜயம்: ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகளின் திவ்ய சரித்திரமும், அவர் செய்த அற்புதமான பிரசங்கத் டும்: விலை ரூபா 1-12-0

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்: ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகளின் கு த்திரமாகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் திவ்விய ச மும், கதாமிருதமும், உபதேச வாக்கியங்களும்: விலை ரூபா

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சரித்திரம்: ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ ஜனனமுதல் மஹா சமாதி வரையில் உள்ள விரிவான சரி விலை ரூபா 2. ஸ்ரீ விவேகாநந்தர் விரிவான சரித்திரம்:

ஸ்ரீ சங்கர விஜயம்: ஆதி சங்கராசாரியர் திவ்ய சரி (ஸ்ரீசங்கரர், சாரதாம்பாள் படங்களுடன்) விலை ரூபா 1-4-0

திவ்விய தேச யாத்திரையின் சரித்திரம்: ஆரிய தேசமாகிய இந்தியாவிலுள்ள திவ்விய ஸ்தல, திவ்விய தீர்த்த, திவ்விய தாதிகளின் மஹிமையும், விசேஷங்களும்: முதல் பாகம் தேசங்கள்) விலை ரூபா 2-0-0

தக்ஷிண இந்தியா சரித்திரம்: ஷை 2-ம் பாகம் (தென் தேச விலை ரூபா 5-0-0

பட்டினத்துப் பிள்ளையார் என்னும் திருவெண்காட்டடிகள் திரம்: விலை அணா 12

ஸ்ரீ பக்தலீலாம்ருத வசனம்: 82 பக்தர்களின் திவ்விய சரி விலை ரூபா 3-0-0

பெரியபுராண, திருவிளையாடற் புராண வசனச் சுருக்கம்: கெட் அளவு: விலை ரூபா 1-4-0

சிவக்ஷேத்திர விளக்கமும், சிவக்ஷேத்திராலய மஹோத்ஸவ மை விளக்கமும்: ஒவ்வொரு க்ஷேத்திரமும் இருக்கும் இட யும், அதன் சமீப ரயில்வே ஸ்டேஷனையும் காட்டும் விவர அட்டவணையுடன்: விலை ரூபா 1-8-0

| | அ. | ப. |
|---|---|---|
| தேவாரதிருவாசகத்திரட்டு | 8 | 0 |
| சிவநாமாவளித் திரட்டு ... | 3 | 0 |
| சிவானந்த மாலை ... | 4 | 0 |
| ஸ்ரீ தத்துவபோதம் ... | 1 | 0 |
| காஞுஜீவவாதக்கட்டளை | 1 | 0 |
| ஷடி (செய்யுள்) ... | 1 | 0 |
| கட்டளைப்பிரபந்தம் (14 கட்டளைகள்) ... | 8 | 0 |
| சைவ சித்தாந்த வரலாறு | 4 | 0 |
| சித்தாந்தப் பிரகாசிகை ... | 2 | 0 |
| பஞ்சீகரண வேதாந்த சித்தாந்தம் ... | 2 | 0 |
| சித்தாந்த தத்துவ லக்ஷணம் | 0 | 9 |
| பஞ்சாக்ஷரப் பதிபசுபாசம் | 1 | 6 |
| ஞானத்தின் பிரிவுகள் ... | 2 | 0 |
| ஓங்காரத்தின் மகத்துவம் | 1 | 0 |
| அஷ்டாக்ஷர மகத்துவம் | 1 | 0 |
| ஏகாந்த சேவை ... | 1 | 0 |
| கலியுக தர்மம் ... | 1 | 6 |
| ஆரியர் சந்தியாவந்தனம் | 1 | 0 |
| பாரத நீதி ... | 2 | 0 |
| திருமங்கல்யதாரணவிதி | 0 | 6 |
| பிள்ளைத் தாலாட்டு ... | 0 | 6 |
| ஜாதிபேத விளக்கம் ... | 2 | 0 |
| விஷப்பிரதி விஷத்திரட்டு | 2 | 0 |
| தன்வந்திரி நாடிசிந்தாமணி | 2 | 0 |
| இராஜயோக வித்யா வினாவிடை ... | 1 | 0 |
| சிவநாமாத்விதக் கீர்த்தனை | 8 | 0 |
| ஸ்ரீதோசாரத் தாலாட்டு ... | 1 | 0 |
| யாப்பிலக்கண வினாவிடை | 4 | 0 |
| அணியிலக்கண வசனம் | 4 | 0 |
| வச்சணந்திமாலை உரை ... | 2 | 0 |

| | அ. | ப. |
|---|---|---|
| தமிழறியும்பெருமாள் கதை | 6 | 0 |
| 108 திருப்பதித் திருப்புகழ் | 8 | 0 |
| அஷ்டப் பிரபந்த மூலம் | 12 | 0 |
| நைடத மூலம் ... | 12 | 0 |
| குசேலோபாக்யான மூலம் | 8 | 0 |
| நன்னூல் மூலம் ... | 2 | 0 |
| ஔவைகுறள் மூலம் ... | 2 | 0 |
| கைவல்லிய நவநீத மூலம் | 3 | 0 |
| வேதாந்தசூளாமணி மூலம் | 3 | 0 |
| மீனாக்ஷியம்மன் பிள்ளைத் தமிழ் மூலம் ... | 3 | 0 |
| சிவசிவவெண்பா முதலிய | 8 | 0 |
| சீகாளத்திக் கலம்பகம் ... | 2 | 0 |
| ஸ்ரீ வைஷ்ணவ சமயதீபம் | 0 | 9 |
| ஸ்ரீவிநாயகசிவசத்திகவசம் | 1 | 0 |
| பக்தி (இன்னதென்பது) | 2 | 0 |
| ஒருதுறைக் கோவை ... | 4 | 0 |
| குடாரம்: (குறள் விஷயம்) | 1 | 0 |
| அம்மணீயம், ஐயாசாமீயம் | 8 | 0 |
| விவேக சிந்தாமணி உரை: | | |
| 1-ம் பாகம் ... | 8 | 0 |
| 2-ம் பாகம் ... | 8 | 0 |
| பஞ்சதந்திர வசனம் ... | 10 | 0 |
| ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை விருத்தியுரை ... | 12 | 0 |
| துவைதசைவ கண்டனம்: | ரூ. | அ. |
| 1-ம் பாகம் ... | 3 | 0 |
| 2-ம் பாகம் ... | 2 | 0 |
| தண்டியலங்காரம் உரை | 1 | 12 |
| ஆத்திசூடிப்புராணம் உரை | 2 | 0 |
| பிங்கல நிகண்டு உரை ... | 2 | 8 |
| பழமொழி அகராதி ... | 2 | 0 |

ரிப்பன் புஸ்தகசாலை, 87, தம்புசெட்டி வீதி, சென்னை

ஸ்ரீ விவேகாநந்த விஜயம்: ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகளின் திவ்விய சரித்திரமும், அவர் செய்த அற்புதமான பிரசங்கத் திரட்டும்: விலை ரூபா 1-12-0

---

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்: ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகளின் குருமூர்த்தியாகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் திவ்விய சரித்திரமும், சுதாமிருதமும், உபதேச வாக்கியங்களும்: விலை ரூபா 1-4-0

---

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சரித்திரம்: ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் ஜனனமுதல் மஹா சமாதி வரையில் உள்ள விரிவான சரித்திரம்: விலை ரூபா 2. ஸ்ரீவிவேகாநந்தர் விரிவான சரித்திரம்: ரூபா 2

---

ஸ்ரீ சங்கர விஜயம்: ஆதி சங்கராசாரியர் திவ்ய சரித்திரம் (ஸ்ரீ சங்கரர், சாரதாம்பாள் படங்களுடன்) விலை ரூபா 1-4-0

---

திவ்விய தேச யாத்திரையின் சரித்திரம்: ஆரிய தேசமாகிய நமது இந்தியாவிலுள்ள திவ்விய ஸ்தல, திவ்விய தீர்த்த, திவ்விய பர்வதாதிகளின் மஹிமையும் விசேஷங்களும்: முதல் பாகம் (வட தேசங்கள்) விலை ரூபா 2-0-0

---

தக்ஷிண இந்தியா சரித்திரம்: ஷை 2-ம் பாகம் (தென் தேசங்கள்) விலை ரூபா 5-0-0

---

பட்டினத்துப் பிள்ளையார் என்னும் திருவெண்காட்டடிகள் சரித்திரம்: விலை அணா 12

---

ஸ்ரீ பக்தலீலாம்ருத வசனம்: 82 பக்தர்களின் திவ்விய சரித்திரம் விலை ரூபா 3-0-0

---

பெரியபுராண, திருவிளையாடற் புராண வசனச் சுருக்கம்: பாக்கெட் அளவு: விலை ரூபா 1-4-0

---

சிவக்ஷேத்திர விளக்கமும், சிவக்ஷேத்திராலய மஹோத்ஸவ உண்மை விளக்கமும்: ஒவ்வொரு க்ஷேத்திரமும் இருக்கும் இடத்தையும், அதன் சமீப ரயில்வே ஸ்டேஷனையும் காட்டும் விவரமான அட்டவணையுடன்: விலை ரூபா 1-8-0